1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

Telegrams: "CATHOLIC PRESS, JAFFNA."
Telephone: No. 100.

# சத்திய வேத பாதுகாவலன்

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

79-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1954-ம் ஆண்டு ஆடி மாதம் 22-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 28-ம் இலக்கம்

## சுதேச வர்த்தமானம்

### காலநிலை

வெயில் அகோரமாய் எறிக்கின்றது. காற்று விழுந்தமையால் அதன் அகோரம் தாங்கமுடியாதிருக்கின்றது. மழை பெய்யாமையால் சிலவிடங்களில் தண்ணீர்த்தட்டுப்பாடு ஏற்பட்டிருக்கிறது.

### கல்லூரி விளையாட்டுப்போட்டி

சம்பத்திரிசியார் கல்லூரியின் வழமையான விளையாட்டுப்போட்டி 17-7-54 சனிக்கிழமை பிற்பகல் மூன்றுமணிமுதல் கல்லூரிமைதானத்தில் பரிமளிப்பாக நடைபெற்றது. இப்போட்டிக்கு யாழ்ப்பாணமேயர் சாம் ஏ. சபாபதி அவர்கள் தலைமைவகித்தனர். அதில் நான்குஇல்லங்கள் பங்குபற்றின. அவைகள் ஆபிரகாம்இல்லம், பொஞ்ஜீன் இல்லம், மத்தியூஸ்இல்லம், டன் இல்லம் என்பன. நான்குஇல்லங்களும் பலவர்ணத் துவசங்களாலும், அழகியபுஷ்பங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. கல்லூரி மாணவர்களும், ஆசிரியரும், மற்றும்அநேக மக்களும் பெருந்திரளாகக் குழுமியிருந்தார்கள். எங்கும் மனோகர காட்சி அளிக்கலாயிற்று. கல்லூரி மாணவர்கள் தத்தம் இல்லங்களிற் போய் அமர்ந்ததும் பிற்பகல் 2-55 மணிக்குக் கல்லூரிஅதிபர் வண. எஸ். ஏ. அருள்நேசன் சுவாமியவர்கள் யாழ்ப்பாண மேயர்சமேதராய் வந்துசேரவே, எல்லோரும் ஒருமுகமாக எழுந்துநின்று தேசியகீதமும், கல்லூரிக்கீதமும் படித்து முடிந்ததும் கல்லூரித்தலைவர் ஆனந்த கோஷங்கள் மத்தியிலே கல்லூரிக் கொடியை ஏற்றிவைத்தார். பின்னர் விளையாட்டுப்போட்டி ஆரம்பமாகப் போவதை ஒலிபெருக்கி அறிவித்து நின்றது. அதன்மேல் பல்வேறு பந்தையவிளையாட்டுப் போட்டிகளும் மும்முரமாக நடைபெற்றன. இப்போட்டிகளில் 16 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு என். விக்னேஸ்வரன் 100 யார், 220 யார், 440 யார் ஓட்டங்களில் புதியசாதனை ஆக்கியிருக்கிறார். எம். பாலசிங்கம் நீளப்பாய்ச்சலில் 17 அடி 11 அங். பாய்ந்து புதியசாதனை செய்திருக்கிறார். போட்டிகளின் முடிவிலே வெற்றிபெற்றவர்களுக்கு மேயர் அவர்கள் பரிசில்களை வழங்கினர். போட்டியில் ஆபிரகாம்இல்லம் முதலாவதாகவும், பொஞ்ஜீன், டன், மத்தியூஸ் இல்லங்கள் முறையே அடுத்தபடியாகவும் வந்தன.

### இளைப்பாறும் ஓவசியர்கள்

பகிரங்கவேலைப் பகுதியிலே தற்போதுஏறக்குறைய 500 ஓவசியர்மார் இருந்துவருகின்றனர். இவர்களிலே 55 வயதடைந்த 72 ஓவசியர்மார் வருகிற புரட்டாசிமாதக்கடைசியில் இளைப்பாறுவார்களெனத் தெரியவருகிறது. ஓவசியர்களைக் குறைக்கும்நோக்கமாகவே இளைப்பாறும்படியாக இவர்கள் கேட்கப்பட்டிருக்கிறார்கள். அதனால் இவர்களின் இடங்களுக்கு வேறுஓவசியர்கள் நியமிக்கப்பட மாட்டார்கள்.

## தேர்தலின் முடிவு (கருதினல் சார்த்தோ)



அடுத்தநாட் காலை ஐம்பது வோட்டுகளால் அதாவது அவசியமான தொகையிலும் அதிகமான எட்டு வோட்டுகளால் (வாக்குரிமை) யூசெப்பெ சார்த்தோ பாப்புவாகத் தெரியப்பெற்றார். முந்தியஇரவு முழுவதும் தமக்கு வேண்டிய மனத் தைரியத்திற்காக அவர் செபித்திருந்தார்.

[illegible]சிஸ்ரைன் சிற்றாலயத்தின் பீடத்துக்குமுன்பாகப் பச்சைப்பட்டு விரித்த மேசைமுன்னிருந்த கணக்கர்மார் வோட்டுகளை எண்ணியெண்ணி அவருடைய பெயரைக் கூறக்கூற அவருடைய மெய் சிலிர்த்து, நடுக்கங் கொண்டது. எண்ணி முடிந்ததும், அவர் எழுந்து பீடத்தின்முன் நெற்றி நிலத்திற்படச் சாஷ்டாங்க தெண்டனிட்டார்.

கருதினல் ஒறெகிலியா அவர்அருகில் சென்று: "பாப்புவின் உந்நத பதவிக்குத் திருச்சபைச் சட்ட விதிப்படி நடந்த உமது தேர்தலை ஏற்றுக் கொள்ளுகிறீரா?" என்று வினவினர். கருதினல் சார்த்தோ தலையை நிமிர்த்திக் கூறிய மறுமொழி அங்கு நின்ற கருதினல்மார் எல்லோருக்குங் கேட்டது. "இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்காதாகில், தேவசித்தப்படி ஆகட்டும்; நான் ஏற்றுக் கொள்ளுகிறேன்."

கருதினல் ஒறெகிலியா குறிப்பிட, மற்றக் கருதினல்மாரின் சிங்காசனக் குடைகள் சுருக்கப்பட்டன. பாப்புவாகத் தெரியப்பட்டவர் தமது சிம்மாசனத்திற்போய் நின்றார். கருதினல் ஒறெகிலியா அவரிடஞ் சென்று: "பாப்பானவராக என்ன பெயர் தரிப்பீர்கள்?" என்று வினவினர். புதிய பாப்பானவர் சற்றே சிந்தித்தார். "எந்தப் பாப்புமாருடைய உதவி எனக்கு அவசியந் தேவையாய் இருக்கிறதோ அவர்களுடைய ஞாபகமாகவும், திருச்சபைக்கும், தமக்கும் எதிராய் எழுந்த வேதகலாபனையை அஞ்சா நெஞ்சத்துடன் எதிர்த்த பாப்புமாருடைய ஞாபகமாகவும் நாம் பத்திநாதர் என்ற நாமத்தையே தெரிந்து கொள்ளுகிறோம்" என்றார்.

### இலவசவைத்தியசாலை

சங்கானைக் கிராமச்சங்கத்தின் அனுமதிப்படி, தலதாபன சேவைக் கம்மிஷன் இம்மாதம் 16-ந்திகதி முதல் பண்ணாகத்தைச்சேர்ந்த திரு. ஈ. கைலாசபிள்ளை அவர்களை இலவசவைத்தியஞ்செய்ய நியமித்திருக்கிறது. இவர் வைத்தியஞ் செய்யும் தற்காலிக ஆயுள்வேத மருந்துச்சாலை கிராமச்சங்க கட்டிடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது.

### இந்தோசீன யுத்தநிறுத்தம்

கடந்த ஏழரைவருடங்களாக நடைபெற்றுவந்தஇந்தோசீன யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஜெனிவாமகாநாட்டில் ஏற்பட்டுவிட்டதாகச் சமாச்சாரம் எட்டியிருக்கிறது. பிரான்சிய பிரதமர் மென்திஸ் பிரான்ஸ் அவர்கள் குறித்தகால எல்லைக்கு ஆறுமணிநேரத்துக்கு முன்னதாக இந்தோசீனவெங்கும் ஏககாலத்தில் யுத்தநிறுத்தஞ்செய்ய உடன்பாடு ஏற்பட்டுவிட்டதென அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### சந்தியோகுமையோர் பந்தி

யாழ்ப்பாணம், சென்வின்சென்ற் டீ போல்சபை, சந்தியோகுமையோர்பந்தியின் வருடாந்தபொதுக் கூட்டம் சென்ற18-ந்திகதிஞாயிறுவாரம் பிற்பகல் அதிவண. என். யோசெவ்சுவாமியவர்கள் தலைமையில் நடந்தேறியது. அதற்குத் தனிச்சங்க அக்கிராசனர், காரியதரிசி, பல்வேறுபந்திகளின் அங்கத்தவர்களும், மற்றும்அபிமானிகளும் திரளாகச் சமுகமளித்திருந்தார்கள். காரியதரிசியாலும், பொக்ஷகாராலும் பந்தியினதும், கரையூர் விவாகஇலாபநிதிச் சங்கத்தினதும் அறிக்கைகளும், வரவுசெலவுகளும் வாசிக்கப்பட்டபின் தனிச்சங்ககாரியதரிசி எஸ் பிரான்சீஸ் அவ்மேரி அவர்களால் வின்சென்ற்டீ போல்சபை அங்கத்தவர்களின் கடமைகளைப்பற்றி இரத்தினச்சுருக்கமாகச் சிறந்ததோர் சொற்பொழிவாற்றப்பட்டது. சிலர்குறிப்புரைகூறியபின் தலைவர்சுவாமி அவர்களின் நன்மதியோடும், பந்தியின் காரியதரிசிகூறிய நன்றியுரையோடும் கூட்டம் முடிவாயிற்று.

### கரைச்சிக் கிராமச்சங்கம்

கரைச்சிக் கிராமச்சங்க தலைவராகத் திரு. அன்ரன் சி. பொன்னம்பலம், ஜே. பி. அவர்கள் மீளவும்தெரியப்பட்டிருக்கிறாரென அறிகின்றோம். கிளிநொச்சி, பரந்தன், கரைச்சி, கண்டாவளை ஆதியாம்கிராமங்களுக்கு இவர் ஆற்றியுள்ளதொண்டுகள் பாராட்டத்தக்கனவாகும்.

### வண. என். சந்தியாகுச் சுவாமியார்

இலங்கையிலுள்ள குருப்பிரசாதிகளிலெல்லாம் தற்போது அதிககாலங் கண்டவரென்று கருதப்படுகிறவரும், தமது சீவியகாலத்திலே நோயென்று சொல்லிப் பாயிற்படுத்தறியாதவருமான வண. சந்தியாகுச் சுவாமியவர்கள் விருத்தாப்பிய நோய்கண்டு கடந்த மூன்றுவாரங்களாகப் பாயும்படுக்கையுமாக இருந்துவருகின்றாரென்பதை அவரிடம் இகபாரகன்மைகள் பெற்றுள்ள அவரின் ஞானமக்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

### தலைவில்லுத் திருயாத்திரை

தலைவில்லுச் சந்தானள் திருநாளுக்குச் செல்லும்யாத்திரிகர்களுக்கு மூன்றாம்வகுப்பு றெயில்வேத் திக்கெற்றுகளின்சலார் குறைக்கப்பட்டிருக்கிறது. வழமையான ஒற்றைச்சலாரிலும், அதிற்பாதியிலும் போகவாத் திக்கெற்றுகள் வழங்கப்படும். இவைகள் இந்தஆடிமாதம் 28-ந் திகதி முதல் 31-ந் திகதிவரை வழங்கப்படும். சலாபத்திலிருந்து 50 மைல் தூரத்துள்ளிருக்கும் எந்தஸ்ரேஷனிலிருந்தும் யாத்திரிகர்கள் இந்தத் திக்கெற்றுகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

### கூட்டுறவுக் கம்மிஷனரின் விஜயம்

அரசாங்க கூட்டுறவு விருத்திப்பகுதிக் கம்மிஷனரான திரு. எஸ். சி. பெர்ணண்டோ அவர்கள் இம்மாதம் 28-ந்திகதி புதன்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயஞ்செய்து 30-ந் திகதி வெள்ளிக்கிழமை றீகல்படமாளிகையில் நடைபெறவிருக்கும் கூட்டுறவாளர்களின் வருடாந்த மகாநாட்டிற்குச் சமுகமளிப்பார். இவர் இங்கே தங்கியிருக்கும் ஐந்துதினங்களிலும் பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களைப் பார்வையிட்டு, பலவிஷயங்களையும்பற்றிக் கலந்தாலோசித்துத் திரும்புவார்.

### கவர்னல்-ஜெனறல்

இலங்கை சுதந்திரம் அடைந்தபின் அதன் முதலாவது கவர்னர்—ஜெனறலாக நியமனம்பெற்று வந்து கடந்த ஐந்துவருடங்களாகத் தமது பதவியைக் கௌரவத்துடன் வகித்திருந்தவரான வைக்கவுண்ட் சோல்பறிபிரபு தம்முடைய பதவிகாலம்முடிந்து இலங்கை மக்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு சென்ற சனிக்கிழமை கப்பல் மார்க்கமாக இங்கிலாந்துக்குப் பயணமாயினர். அவர் கொழும்பிலிருந்து புறப்பட்டு ஒரு மணிநேரத்திற்குப்பின் — அதாவது மாலை 6-15 மணிக்கு இலங்கையரான முதலாவது கவர்னர்—ஜெனறலாகிய சேர் ஒலிவர் குணதிலக அவர்கள் இராணிமாளிகையில் பிரதம நீதியரசர் முன்னிலையில் விசுவாசப்பிரமாணஞ்செய்து பதவியேற்றிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூசையில் என் இரக்கம்...

வனத்துச்சின்னப்பர்ஓர்சுத்த வாளர். காட்டிலே தபஞ்செய்து வந்தார். அங்கு இன்னெருபகுதியில்வசித்த தபோதனர்களுக்குப் போதிக்கும்படி அவரை ஓர்முறை அழைத்தார்கள். ஒருநாள் வனவாசிகள் திவ்விய பூசைகாணும்படி கோவிலுக்குச் செல்லுகையில், அவர் வாசலில் நின்று அவர்களைக் கூர்ந்து நோக்கிக் கொண்டிருந்தார். அவருடைய தெய்வ பக்தியை முன்னிட்டுக் கடவுள் அவருக்கு ஒருவரம் அளித்திருந்தார். அதனுல்அவர் மானிடஉள்ளங்களின் அந்தரங்கங்களை அறிந்திருந்தார். வனவாசிகள் தங்கள் அந்தரங்கபாவங்களை அறிக்கையிட்டுத் தங்கள் வாழ்க்கையைத் திருத்தி அமைக்கும்படி புத்தி புகட்டுவார்.

அன்றுகோவிலில் நுழைந்து கொண்டிருந்த ஒருவரின்முகம் மிகவும்கறுத்து அரோசிகமாய் இருந்தது. அவர் பக்கத்தில் நடந்துசென்ற இருபிசாசுகள் அவரை இங்குமங்கும் சங்கிலிகளால்இழுத்தன. அவருடைய காவற்சம்மனசு சிறிது தூரத்தில் விசனத்துடன் நடந்தார். அந்தப்பாவியின் ஆத்துமநிலையைப் பார்த்தசின்னப்பர் துயரத்துடன் அழுது மார்பில் அறைந்துகொண்டார். பூசை முடியும்வரை கோவில்வாசலில் உட்கார்ந்து, அழுது புலம்பிக் கொண்டிருந்தார்.

பூசைமுடிந்து வனவாசிகள் வெளியேறுகையில் சின்னப்பர் கூர்ந்து கவனித்தார். அவர் தேடிய மனிதனின்முகம் அழகுடன்பிரகாசித்தது. காவற் சம்மனசு அவரருகில் நடந்தார். பிசாசுகள் தொலைவில்வந்தன. உடனேசின்னப்பர் வனவாசிகள்யாவரையும் நோக்கி: "கடவுள்நல்லவர்; அவரதுநன்மைத் தனத்தை நாவால் வர்ணிக்க முடியாது; நடந்ததைச்சொல்லுகிறேன் கேளுங்கள்: இந்தமனிதன் கோவிலுள் நுழைகையில் ஆத்துமம் கறுப்பாயிருந்தது; பிசாசுகள் அதைச்சூழ்ந்திருந்தன; வெளியேவருகையில் ஆத்துமம் அழகாயிருக்கின்றது; சம்மனசு அருகில் நடக்கிறர்" என்றுகூறி, அந்தமனிதனைப் பார்த்து: "கடவுளை மகிமைப் படுத்தி உமது ஆத்துமத்தின் நிலையை எங்களுக்கு எடுத்துரைப்பாராக" என்றார்.

"நான் பெரியபாவி; நெடுங் காலமாக நான் பாவவாழ்க்கை நடத்தினேன். இன்று நான் பூசைகாண்கையில், "கழுவுங்கள், சுத்திசெய்யுங்கள், உங்கள் பாவங்கள் இரத்தாம்பரம்போல் இருந்தால் பனியைப்போல வெண்மையாகும்" என்று இசையாஸ் தீர்க்கதரிசிமூலமாய்க் கடவுள் கூறிய வார்த்தைகளுக்கு நான்செவிகொடுத்தேன். உடனே கடவுளை நோக்கி நான் உருக்கமாகப்பிரார்த்தித்தேன். 'பாவிகளைக் காப்பாற்றும்படி இவ்வுலகத்துக்குவந்த ஆண்டவரே, நிர்ப்பாக்கிய பாவியாகிய என்மேல் இரக்கமாயிரும்; என்னிடம் உமது வாக்குறுதியை நிறைவேற்றும்' என்றேன். 'ஓ! என்சர்வேசுரா, இனிமேல் ஒருபோதும் பாவஞ்செய்யமாட்டேன்' என்று வாக்களிக்கிறேன்; ஆண்டவரே, பெரும் துரோகியான என்னைஏற்றுக் கொள்ளும்; என் பூசைநேரம் முழுவதும் திரும்பத்திரும்ப இவ்விதம்கூறினேன். புதுவாழ்க்கை தொடங்குவேன்என்றும் உறுதியான தீர்மானத்துடன் போகிறேன்" என அந்த வனவாசி கூறினர். "திவ்விய பூசையின் வல்லமையால் பாவிகளை மனஸ்தாபப்படக்கொண்டுவந்துசேர்க்கும் சர்வேசுரா நீர்எவ்வளவோ நல்லவர்" என்று அங்கிருந்த யாவரும் கடவுளை வாழ்த்தினர்கள்.

பூசையில் எழுந்தேற்றநேரத்தில் ஒருவன் சற்பிரசாததிரு அப்பத்தையும், பாத்திரத்திலிருக்கும்கிறீஸ்துநாதரின் விலைமதியாத திருஇரத்தத்தையும் பரலோகபிதாவுக்கு ஒப்புக்கொடுத்து அந்தத்திருப்பலியின் பலனைக்குறித்துக் கடவுளிடம் தனது பாவாக்கிரமங்களுக்காக மன்னிப்புக்கேட்பானுனல், தன் பாவங்களுக்காகத் துயரப்பட்டு அவைகளைவெறுத்து விலக்குவதாக உண்மையாகவேவாக்களிப்பானுனல் பிதாவாகியசர்வேசுரனின் கோபம்தணிகிறது. அவனுடையபாவாக்கிரமங்கள் எவ்வளவுபெரியதென்ருலும் அவனை மன்னிக்கிறர்.

"பூசையில் என்இரக்கம் மாபெரிது. எவ்வளவுபெரியபாவியானுலும் திவ்விய பூசைகண்டு தன்பாவங்களுக்காக மன்னிப்புக்கேட்பானுனல் நான்மகிழ்ச்சியுடன் அவனைமன்னிப்பேன்" என்று அர்ச். மெத்தில்தம்மாளுக்கு ஆண்டவர் வாக்களித்திருக்கிறர். — (உத்தம மனஸ்தாபத்தாலும், உத்தம மனஸ்தாபஉள்ளத்துடன் பூசைகாண்பதாலும், சாவானபாவம் மன்னிக்கப்பட்ட போதிலும், நாம் செய்துள்ள சாவான பாவங்களைப் பாவசங்கீர்த்தனத்தில் கட்டாயம் வெளிப்படுத்தவேண்டும். பாவசங்கீர்த்தனம் செய்யாமல் திவ்வியநற்கருணை வாங்கலாகாது. இது திருச்சபையின் சட்டம்.)

## தேம்பாவணியும் செபமாலையும்

(பண்டிதர் C. செல்வரத்தினம்)

### களிகூர்ந்தகாரணிக்கம்

5-ம் காரணிக்கம்–8-ம் பிரியதத்தம்

### 48. இந்தப் பாலகன் யார்?

சூசைமாதவனும், தேவதாயாரும் திவ்வியபாலகனைக்காணுது பெருந்துயரோடு நாலாதிசையும் தேடியபோது அவர் எங்கே இருந்தார்? என்ன செய்துகொணடிருந்தார்? அந்த மூன்றுநாட்களும் அவர் தேவாலயத்திலேயே தங்கியிருந்தார். பரமபிதாவின்வீடாகிய தேவாலயமே அந்த மூன்றுநாட்களும் அவருடையவீடாயிற்று.

எதை உண்போமென்றும், எங்கே தங்குவோம்என்றும் அவர் கவலைப்படவில்லை. தம்மை அனுப்பியவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதே அவரது கருத்தாக இருந்தது.

ஜெருசலேம் தேவாலயத்தையடுத்து ஒருபோதகமண்டபம் இருந்தது. வேதசாஸ்திரிகள் அப்போதக மண்டபத்தில்தான் வேதப்பிரமாணங்களை வியாக்கியானஞ்செய்து போதிப்பார்கள். ஐயுறவான விஷயங்கள்பற்றிய விவாதமும் அங்கேதான்நடப்பது வழக்கமாக இருந்தது.

அந்நாட்களிலே யூதர்களுக்குள்ளேயும் பலகட்சிகள் இருந்தன. ஒவ்வொரு கட்சியாருக்குமிடையே பதவித அபிப்பிராயபேதங்கள் இருந்தன. எனவே, ஒவ்வொருபிரிவாரும் தத்தம்கட்சியை எடுத்து நிலைநாட்டிப் பேசுவார்கள். வாதங்களைக்கேட்டு ரசிப்பதற்காகவும், தங்கள்அனுதாபத்தைத் தெரிவிப்பதற்காகவும் பொதுமக்களும் வந்து கூடுவார்கள்.

அங்ஙனமாக, வேதகொள்கைகளைப் பொறுத்தமட்டில் மக்களுக்கிடையே பலத்தஆட்சேபனைகள் இருந்தன. பரிசேயர்என்ற பிரிவார் நியாயப்பிரமாணங்களை அறிந்து, அவற்றைநுணுக்கமாய் அனுசரிப்பதிலேயே வேதமுறைமை தங்கியுள்ளதென்றும், அவ்வாறுஒழுகுபவர்கள் தாங்கள் மாத்திரமேயென்றும் பெருமைபாராட்டி நின்றனர்.

செல்வந்தராகிய சதுசேயரோ வேத அனுசாரங்களில் பற்றில்லாராய் உலக இன்பங்களில் மூழ்கிக்கிடந்தனர். ஏனைய சாதாரணமக்களோ இவ்விரு கட்சியாரினதுகொள்கைக்கும் விலக்கானவர்களாய்த் தங்கள்மூதாதையரின் சம்பிரதாயத்திற்கேற்க நடந்துவந்தார்கள்.

மெசியாவின் வருகையைப்பற்றிப் பொதுவாக எல்லாமக்களும் ஒருமுகமான அபிப்பிராயமுடையவராயிருந்த போதிலும், "அவர் ஓர்அரசனுகவே இருப்பார்" என அவர்கள் எண்ணியிருந்தார்கள். தங்கள்இராச்சியத்தை அந்நியர்ஆட்சியினின்றும் மீட்டுத்தாவருபவரேமெசியாவாக இருப்பார்என்ற தப்பறையான விளக்கம்கொணடிருந்தார்கள் வேதசாஸ்திரிகள்முதலாய்ச் சாதாரண மக்களைப்போல அவரின் இராசரீகத்தையே எதிர்நோக்கிக் காத்திருந்தனர். இதனுலன்றே தேவபாலன் பிறந்தபோது தீர்க்கதரிசனங்களிற் சொல்லப்பட்டபிரகாரம் பலஅற்புதங்கள் நிகழ்ந்தும் மெசியா பிறந்திருப்பதைப்பற்றி அவர்கள் அறியாதிருந்தனர். இதவும் தேவதிருவுளம்போலும்!

ஏனெனில், தேவகுமாரன் பூமியில் உதித்துப் பன்னிரண்டு வருடங்களாகியும் அதுபலருக்கு மறைக்கப்பட்டே இருந்தது. தளராத விசுவாசத்தோடிருந்த ஒருசில புண்ணியஆத்துமாக்களுக்கு மாத்திரமே அவர் தம்வருகையை வெளிப்படையாய்க் காட்டியருளலானர்.

பிறப்பின்போது தேவ வல்லமையைக்காட்டி மறைத்ததுபோல, பன்னிரண்டாம் பராயத்திலேயும் வேதசாஸ்திரிகளுக்குத் தமது தேவவல்லமையைக் காட்டச்சித்தமானர்.

தேவகுமாரன் தேவாலயத்திலே தங்கிநின்ற அந்தமூன்றுநாளும் வேதசாஸ்திரிகளிடம் படிக்கவந்தவர்போல அவர்களோடு பழகிக்கொள்ளுகிறர். மிகவும் கீழ்ப்படிதலோடு அவர்களின் கட்டளைகளுக்குப்பணிகிறர். வித்தியாபாரகர்களின் விளக்கங்களைக் கவனமாகக்கேட்கிறர். அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்கபதில் கூறுகிறர். அவரதுவிடையைக்கேட்ட அறிவிற்சிறந்த பண்டிதர்களும் ஆச்சரியமுறுகின்றனர். சிலதடவைகளில் தேவகுமாரன் கேட்ட வினக்களுக்கு அவர்கள் விடைகூறமுடியாது விழித்து நிற்கிறர்கள். அதனுல் வேதசாஸ்திரிகள் ஒருவர்ஒருவரைப்பார்த்து: "இந்தப்பாலகன் யார்?" என வினவிநிற்கின்றனர்.

"முப்பகல் இவரிவ்வாறே
முற்றிய துயர்கொண்டேங்க
ஒப்(பு)அகல் மாட்சிப்பாலன்
ஒளிமணிக் கோயில்தன்னிற்(கு)
அப்பகல் மறையின்வல்லோர்
சவையினுட் பலவைக்கேட்ப
அப்பகல் மூன்றும்வை[illegible]
அனைவரும் வியப்பச்செய்தான்."

## நாலு சங்கதிகள்

● அமெரிக்க ஐக்கியதேச கடற்படை ஏ 4 டி 'ஸ்கைஹோக்' எனும் நாமத்துடன் ஜெற்போர விமானம்ஒன்றை நவமாகக்கட்டியிருக்கின்றது. அத்தேசத்திலே இதுகாலவரை கட்டப்பட்ட ஜெற்போர் விமானங்களிலெல்லாம் இதுவே மிகச்சிறியதும், மிகப் பாரமற்றதுமாகும். தற்போதுள்ள ஜெற்போர்விமானங்களிலெல்லாம் இது பருமனில் அரைவாசிக்குமேல் குறைந்ததும், போராடுவதில் மிகச்சிறந்ததுமாம்.

● லண்டன்நகரிலே கொலைகாரர் முதலாம் கிறிமினல் குற்றவாளிகளைக் கண்டுபிடித்துவரும் பொலிஸ்நாய்களிளெல்லாம் மிகப்போனது றெக்ஸ் III என்பதுதானும். சமீபத்திலே இது 78-ம் முறையாகக் கொலைகாரன்ஒருவனைச் சூழ்ந்துபிடி[illegible]யிருக்கிறது.

● ஜேர்மனியிலே நூறம்பேர்க்நகரிலே மட்பாண்டம் வனைகிறவனுன ஹான்ஸ் மோகர்என்பவன் 50அவித்த முட்டைகளை அவற்றின் கோதுகளுடன் இரண்டுமணித்தியாலத்தில் உண்டுவிடுவதாகத் தனதுசிநேகிதன் ஒருவனுடன் பந்தையம்போட்டான். பந்தையம்வென்ருன். அதற்குப் பிரதியாக அவன் இரண்டுலிற்றர்பீர் பெற்றுக்கொண்டான்.

● போர்த்துக்கால்தேச கொண்டெக்சியா எனுமிடத்திலே 33 வயதுடைய அல்பிறேு பெசின்கோஎன்பவர் இரவிலோ, அன்றேல் பகலிலோ எந்த நேரத்திலும் கடிகாரம்இல்லாமலே சரியான நேரத்தைச் சொல்லிவருகிருராம். கண்பார்வை குன்றிய இவர் தனதுபாலியமுதலே அவ்வாறுசொல்[illegible]ருந்துவருவதாகச் [illegible]கின்ருராம்.

● பர்மாவிலே ரங்கு எனுமிடத்தைச்சேர்ந்த சுமார் 50 மனையாட்டிகள் தங்களுள்செய்துகொண்ட வாக்குறுதியின்பேரிலே வாரந்தோறும் அங்குள்ள மீன்கடைக்குச்சென்று உயிருள்ளமீன்களை விலைகொடுத்துவாங்கித் திரும்பவும் கடலிற்கொண்டுபோய் விட்டுச் சீவகாருண்ணியதொண்டில் ஈடுபட்டுவருகின்ருர்களாம்.

● அமெரிக்க ஐக்கியதேசமக்கள் இதற்குமுன் இல்லாதவிதமாய்ச் சென்ற 1953-ம் ஆண்டிலே அதிகமானதேநீர் பருகியிருக்கின்ருர்கள். சென்றவருடம் அவர்கள்பாவனைசெய்த தேயிலை 10 கோடியே 33 லட்சம் ருத்தலாகும். சென்றவருடத்திலே அங்கு இறக்குமதியான தேயிலை 10 கோடியே 50 லட்சம்ருத்தல். இத்தொகை முந்தியவருடத்திலும் 11 சதவிகிதத்தால் அதிகரித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க



# சமாச்சாரம்

## திருச்சபையும் பஞ்சாங்க திருத்தமும்

காத்திரமிக்க நியாயங்களை அடிப்படையாகக் கொண்டு திருத்தஞ் செய்யப்படுமானல், தற்போது பாவனையிலே இருந்து வருகின்ற கிறகோரியாரின் பஞ்சாங்கம் திருத்தப்படுவதைக் கததோலிக்க திருச்சபை எதிர்க்கமாட்டாதென்று "ஓசேர்வாத்தோறே ரோமானே" என்னும் வத்திக்கான் பத்திரிகையிலே வத்திக்கான் வானசாஸ்திர சம்பந்தமான அவதான நிலையத்தின் தலைவரும், யேசுசபைக் குரவருமான வண. டேனியல் ஜே. கே. ஓ' கொனெல் சுவாமியார் எழுதியிருக்கின்றார். பஞ்சாங்கம் திருத்தப்படவேண்டுமென்ற இந்திய அரசாங்கத்தின் பிரேரணைபற்றிச் சுவாமியார் எழுதியகட்டுரையில் இவ்வாறு எழுதியிருக்கின்றார். ஜெனிவா நகரில் கூடுகின்ற ஐக்கியநாடுகளின் பொருளாதார—சமூகசங்கத்தால் பஞ்சாங்கதிருத்த விஷயமும் கலந்துஆலோசிக்கப்படவேண்டுமென இந்திய அரசாங்கம் ஓர்பிரேரணை கொண்டுவரவிருக்கின்றது.

தற்போது செய்யநினைக்கும் பஞ்சாங்க திருத்தமானது ஓர் வருடத்தை நான்கு சமமான காற்பாகங்களாக வகுத்து, மாதங்களின் காலநீட்சியைத் திருத்திச் சமப்படுத்துவதாகும். வருடத்தின் கடைசி நாளும், "லீப்பியர்" வருடங்களில் ஆனி 30-ந் திகதிக்குப் பின்வரும் நாளும் எந்தஒரு மாதத்தையோ, அன்றேல் வாரத்தையோ சேராத 'மேலதிக' நாட்களாயிருக்கும். அதனல் திருத்தப்பெறும் பஞ்சாங்கத்திலே எந்தஒருவிசேஷப்பட்டதிகதியும் வருடந்தோறும் வாரத்தின் அதேநாளிற்றானே எப்போதும் வந்துகொண்டிருக்கும்.

"தற்சமையம் நடைமுறையிலே இருந்துவருகின்ற பஞ்சாங்கத்திற் செய்யப்படும் திருத்தத்தைக் கொள்கையளவிலே திருச்சபை எதிர்ப்பதற்கு நியாயம் எதுவும்இல்லை; ஆனல், உலக மக்களது பொருளாதார-சமூக வாழ்க்கையின் முக்கியதேவைகளைப் பூர்த்திசெய்வதையே நோக்கமாகக்கொண்டு பஞ்சாங்க திருத்தத்திற்கான ஓர்பொது விருப்பு எழுந்திருந்தால் அது இவ்விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கு"மென்று முன்சொன்ன வண. ஓ' கொனெல்சுவாமியார் கூறியிருக்கின்றார்.

## மரியாயின்வருடத் தபால்முத்திரை

மரியாயின்வருடத்துக்கென்று வத்திக்கான் தபாற்கந்தோர் ஆறுஇனப் புதியதபால் முத்திரைகளைப் பாவனைக்குவிடுக்கவிருக்கின்றது. இந்தஆறு இனமான முத்திரைகளும் முறையே 3, 4, 6, 12, 20, 35 லீர் பெறுமதியுடையனவாய் இருக்கும். வடிவத்திலும் இவைகள் வேறுபட்டிருக்கும். 3, 6, 20 லீர் பெறுமதியானமுத்திரைகளிலே ஒன்பதாம் பத்திநாத பாப்பானவரின் பிரதிமையுடன் "தேவமாதாவின் மாசில்லாத உற்பவத்தை விசுவாசசத்தியமாக நிர்ணயித்து 1854-ம் ஆண்டு மார்கழிமாதம் 8-ந்திகதி பிரகடனஞ்செய்தார்" எனும் வாக்கியம் பொறிக்கப்பட்டிருக்கும். இச்சம்பவத்தின் ஞாபகார்த்தமாகவே பன்னிரண்டாம் பத்திநாத பாப்பரசர் 1954-ம் ஆண்டின் மரியாயின் வருடத்தைப் பிரகடனஞ்செய்யலாயினர்.

### நெதர்லாந்தும் மிஷனரிமாரும்

நெதர்லாந்தென அறியப்பட்டுவருகின்றஒல்லாந்துதனது நாட்டினராய்த் தனதுநாட்டிலுள்ள ஒவ்வோர் நான்கு குருப்பிரசாதிகளுக்கும் வெளிநாட்டிலே ஒவ்வோர்குருவானவரை மிஷனரியாகக் கொண்டிருக்கிறதென்றும், சனத்தொகையோடு ஒப்பிட்டுப்பார்க்குமிடத்துஅதிகவீதமான மிஷனரிமாரை அது கொண்டிருக்கிறதென்றும் விசுவாசப்பரப்புதற்சபைத் திருச்சங்கத்தால் வத்திக்கானில்விடுக்கப்பட்ட அறிக்கைஒன்று தெரிவிக்கின்றது. அவ்வறிக்கையின்படி, நெதர்லாந்து பிறநாடுகளிலே அதிக மிஷனரிமாரைக் கொண்டிருக்கின்றது. சனத்தொகை விகிதப்படி, அடுத்தபடியாக அயர்லாந்து ஐவருக்கு ஒருவர்வீதமும், மூன்றாவதாகப் பெல்ஜியம் எழுவருக்கு ஒருவர் வீதமும் பிறநாடுகளில் தங்கள் மிஷனரிமாரைக் கொண்டிருக்கின்றன. என்றாலும் தொகையளவில் மிகப்பெரிதாய்ப் பிரான்ஸ்தேசம் 3,382 மிஷனரிமாரைக் கொண்டிருக்கின்றது.

## ஐக்கிய கிறீஸ்துவமுன்னணி

ஜேர்மனியிலே அரசியல் வாழ்க்கையிலும், பொதுசன வாழ்க்கையிலும் கத்தோலிக்கருக்கும், புரொட்டஸ்தாந்தருக்குமிடையே தொடர்ந்து ஒத்துழைப்புஇருந்துவரத் தக்கதாய்க் கத்தோலிக்க-புரொட்டஸ்தாந்த ஐக்கியகிறீஸ்தவ முன்னணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. சமீபத்திலே மேற்கு ஜேர்மனியைச்சேர்ந்த பாட்பொல்நகரில் நிகழ்ந்த மகாநாடுஒன்றில், அத்தகைய முன்னணியை அமைக்க உடன்பட்டுக்கொண்ட ஜேர்மனிய கத்தோலிக்க, புரொட்டஸ்தாந்த பிரமுகர்களான நூறுபேருள் மேற்கு ஜேர்மனியின் கத்தோலிக்கபிரதமரான டக்றர் கொன்ரூட் அடெனோவர் அவர்களும் ஒருவராயிருந்தார். அம்மகாநாட்டில் அவர்பேசியபோது: "கம்யூனிஸ்த கொள்கை பின்தாங்கிநிற்கும் லோகாயத அச்சுறுத்துகையைக் கிறீஸ்து சமயம் என்ற ஓர்இணைக் கொள்கையில் சேர்ந்துகொள்ளும் ஓர்மனித சமூகத்தால் எதிர்த்துநின்று வெற்றிகொள்ளமுடியும்; சரித்திரபூர்வமான இச்சந்தர்ப்பத்திலே ஓர் ஜேர்மனியர் என்றமட்டிலும், ஓர்கிறீஸ்தவர் என்றமட்டிலும் இருசபைகளையுஞ் சேர்ந்த கிறீஸ்தவர்கள் ஐக்கியப்பட்டுத் தங்கள்கடமையைச் செய்யுமாறு அழைக்கப்பட்டிருக்கிறார்களென நான் உணருகிறேன்" எனக் கூறிநின்றார்.

### முதல் இந்திய அர்ச்சியசிஷ்டர்

அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பெற்ற முதலாவது இந்தியர் யார்? அர்ச். கொன்சாலோ கார்சியாவேயாம். இவர் 1597-ம் ஆண்டு மாசிமாதம் 5-ந் திகதியன்று யப்பானியதேசநாகாசகி நகரிலே சிலுவையில்அறையுண்டு உயிர்துறந்து வேதசாட்சியாயினர். இவருடன் வேறும் 25 பேர் வேதசாட்சிகளாகி இவருடனேயே அர்ச்சியசிஷ்டபட்டம் சூட்டப்பட்டார்கள். இவர்களில் ஆறுபேர் அர்ச். பிரான்சீஸ்குவின் முதலாம்சபையைச் சேர்ந்தவர்கள். இந்தஆறுபேரிலும் அர்ச். பீற்றர் பப்ரிஸ்ற், ஆரோகணத்தின் அர்ச். மாட்டின், அர்ச். பிரான்சீஸ் பிளான்கோ எனும்மூவரும் குருமார். யேசுவின் அர்ச். பிலிப் ஒரு குருமாணவர். அர்ச். கொன்சாலோ கார்சியா, அர்ச். மிக்கேலின் பிரான்சீஸ்எனும் இருவரும் பிறதர்மார். பிரான்சீஸ்கன் சபையார் இவர்களின் திருநாளை மாசிமாதம் 5-ந் திகதி கொண்டாடிவருகின்றனர். இந்தியரான அர்ச். கொன்சாலோ கார்சியாவின் திருநாளை இந்தியாவிலும் பிரஸ்தாபமாகக் கொண்டாடுவதற்கான ஓர் விருப்பம் தற்போது எழுந்திருக்கிறது.

### கத்தோலிக்கஉலகின் சனத்தொகை

தற்போது உலகமுழுவதிலும் 47 கோடியே 20 லட்சம கத்தோலிக்கர் இருந்துவருகிறார்கள் — அதாவது உலகின் குடிசனத்தொகையில் ஏறக்குறைய ஐவரில் ஒருவர் கத்தோலிக்கரென்று வண. அட்றியன் பூபாட் சுவாமியார் மதிப்பிட்டுப் பரீஸ்நகரில் பிரசுரமாகும் "குருமாரும் மிஷனும்" என்ற வெளியீட்டில் பிரசுரஞ்செய்திருக்கின்றார். அவருடைய மதிப்பின்படி, வருடந்தோறும் 54 லட்சம் கத்தோலிக்கபிள்ளைகள் பிறக்கின்றார்கள். கிறீஸ்தவபிள்ளைகளாய் வருடந்தோறும் 1 கோடியே 4 லட்சம் பிள்ளைகளும், கிறீஸ்தவர்கள்அல்லாத பிள்ளைகளாய் வருடந்தோறும் 1 கோடியே 73 லட்சம் பிள்ளைகளும் பிறப்பதாக அவர் மதிப்பிடுகின்றார். கம்யூனிஸ்த ஆட்சியில் 78 கோடியே 40 லட்சம்மக்கள் இருந்துவருகிறார்களென்றும், இவர்களிலே கத்தோலிக்கர் 6 கோடியே 40 லட்சம் பேரென்றும் இவர் தெரிவிக்கின்றார். ஆசியாவின் குடிசனத் தொகையாகிய 130 கோடிமக்களில் கத்தோலிக்கர் 3 கோடியே 10 பேரேயாம்.

### மகாநாட்டுத் தபால்முத்திரைகள்

தென்னமெரிக்காவைச் சேர்ந்த பெருநாட்டின் தலைப்பட்டணமாகிய லீமா நகரிலே இவ்வருடஇறுதியில் தேசியசற்பிரசாத மகாநாடுஒன்று நடைபெறவிருக்கிறது. இதற்குத் தேவைப்படும் பணத்தைக் கண்டுகொள்ளத்தக்கதாய் இவ்வருடத்திலே இன்னும் எஞ்சியிருக்குங்காலத்தில் அந்நாட்டுக் கடிதங்கள், பார்சல்களிலெல்லாம் ஓர்விசேஷ தபால்முத்திரை ஒட்டப்படவிருக்கிறது. பெருவிய பாராளுமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்று இந்த ஐந்துசத விசேஷ தபால்முத்திரைகள் சற்பிரசாதமகாநாட்டின் சின்னத்தைத் தாங்கியிருக்கின்றன. கூடியவிலையுள்ள மற்றும் ஞாபகதபால் முத்திரைகளும் பாவனைக்கு விடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை எல்லாம் வாங்கவேண்டுமென்பது கட்டாயமல்ல.

### பர்மாஅனுப்பிய தூதுக்கோஷ்டி

பின்வரும் செய்தி பர்மாஅரசாங்கத்தால் அதிகாரபூர்வமாக அனுப்பிவைக்கப்பட்டு அந்நாட்டில் பிரசுரமாகும் சகலபத்திரிகைகளிலும் வெளிவரலாயிற்று. பர்மாஅரசாங்கம் ரோமாபுரிக்கு அனுப்பிவைத்த கத்தோலிக்க குருமார், பிறதர்மாரின் தூதுக்கோஷ்டியானது ரோமாபுரியிலிருந்து ஆகாயவிமானமூலம் சமீபத்திலே றங்கூன்நகர்வந்து சேர்ந்தபோது, பர்மாப்பிரதமர் தமது வாசஸ்தலத்திலே அவர்களைவரவேற்று உபசரிக்கலாயினர். அந்த உபசாரத்தின்போது வி. பேஸின் மேற்றிராணியாரும் சமூகமாயிருந்தார். பர்மாவாசிகளையே அடக்கிய இந்தக்குருமார், பிறதர்மாரின் தூதுக்கோஷ்டியானது ரோமாபுரியிலே பாப்பரசரைத்தரிசித்து, பாஸ்குகால திருச்சடங்குகளுக்குச் சமூகமளித்துச் சமய, சரித்திர சம்பந்தமான அநேக இடங்களைப் பார்வையிட்டு, பர்மா அரசாங்க பிரதிநிதிகள் என்றமட்டிலே எங்கும் குதூகலமாக வரவேற்கப்பட்டது. இவர்கள் நான்குமுறை பாப்பரசரைத் தரிசிக்கும் அதிர்ஷ்டத்தைப் பெற்றுக்கொண்டார்கள். உலகம்முழுவதிலுமே எந்தஒரு அரசாங்கத்தாலும் எக்காலத்திலாவது குருமார், பிறதர்மாரைக் கொண்ட தூதுக்கோஷ்டி ஒன்று அதிகாரபூர்வமாக ரோமாபுரிக்கு அனுப்பிவைக்கப்பட்டமை இதுவே முதன்முறையாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடி மாதம்

போதுக்கருத்து :— அந்நிய நாடுகளிற்போய்க் குடியேறச்செல்லுகிறவர்களின் ஆத்துமபராமரிப்புக்காக வேண்டிக்கொள்ளுவது.

மிஷன்கருத்து :— அங்கோலாவிலும், மொசம்பிக்கிலுமுள்ள திருச்சபைக்காக மன்றாடிக்கொள்ளுவது.

சத்திய வேத

பாதுகாவலன்

1954-ம் ஆண்டு

ஆடி மாதம் 22-ந் திகதி

# அர்ச். தொமினிக்சவியோ

( Communicated )

அர்ச். ஜோண்பொஸ்கோ பிரபலம்பெற்ற ஓர்குருவானவர். இவர் தமதுஅன்பாலும், சாதுரியமான நடாத்துகையாலும், சிறந்த முன்மாதிரிகையாலும் தம்முடைய மாணவர்களை முன்னிருந்ததிலும் மேலான ஞானச்சீவியம் உள்ளவர்களாய் ஒழுகப் பூரணமாகமாற்றி விடுவார்.

இதற்குஅத்தாட்சி, சென்ற ஆனிமாசம் 13-ந் திகதி ரோமாபுரியில்நடந்த சம்பவம்ஒன்றே போதுமானது. அன்றுதினம் அர்ச். ஜோண்பொஸ்கோவின் மாணவர்களில் ஒருவராயிருந்த தொமினிக் சவியோ அர்ச்சிய சிஷ்டபட்டம் சூட்டப்பெற்றார். இவர் இளம்பராயத்தில்—அதாவது 14-ம் வயசில் மரித்தார். "மாசற்றசீவியம் முதியவயசுக்கு ஒப்பாம்" (4-9) "சிறுவர்களுள்ளும் அர்ச்சியசிஷ்டர்கள்உளர்" என்பது அர்ச். பத்தாம்பத்திநாத பாப்பானவரின்வாக்கு.

சாங்கோபாங்க சீவியம் நீடிய ஆயுளிலேயோ, அல்லதுகிரியைகளின் உயர்விலேயோ தங்கியதல்ல. சிற்சிலசிறார்களின் இருதயங்களில் முதியோரைப்பார்க்கிலும் சிநேகப்பற்றுதல் அதிகமாய்இருக்கும். முதியோர் தங்கள்சிறுவயதில் அதிகநேசப்பற்றுதற் குணத்தைக் கொண்டிருந்ததை அவதானிப்பதினால் இதுநுட்பமாகப்புலப்படக்கூடும்.

தொமினிக்சவியோவைமுதன்முறையாக அர்ச். ஜோணபொஸ்கோ கண்டபொழுதே, தேவசிநேகப் பற்றுதல் அச்சிறுவனில் என்னென்னசெய்ய ஆற்றல் உள்ளதென்பதை மட்டிட்டுக்கொண்டார். அத்தோடுநில்லாது வருங்காலத்திலே அவரை ஓர் அர்ச்சியசிஷ்டராக்கிச் சருவேசுரனுக்குஉவப்பான ஓர்பலியை ஒப்புக்கொடுப்பதென்றும் தீர்மானித்தார். அர்ச்சியசிஷ்டராகக்கூடிய அநேகஇளைஞர்கள் இன்றுமே பாடசாலையின் கரடுமுரடான ஆசனங்களிலிருந்து கல்விகற்கிறார்கள். கர்த்தர் அர்ச். ஜோண்பொஸ்கோவைப் போன்ற தீர்க்கதரிசிகளை அவர்கள்மத்தியில் அனுப்புவாராக!

தமது ஞானப்பிள்ளைகளின் சீவியவரலாற்றைத் திருத்தமாக அர்ச். ஜோண்பொஸ்கோகுறிப்பிட்டு வைத்துள்ளார். அர்ச். தொமினிக்சவியோ இற்றைக்கு 112 ஆண்டுகளுக்குமுன் ஓர் வறியகுடும்பத்திலே ஒருகொல்லனின்மகனாய்ப் பிறந்தார். பாடசாலை சென்றபோதுவிளையாட்டு வேளையிலோ, இளைப்பாறுகிற நேரத்திலோ, தனது உடன் மாணவர்களுடன் தாராளமாகச்சம்பாஷித்து நல்லமனதோடு கலந்துரையாடிப்புழங்கிக்கொள்வர். பாடசாலைக்குப் பிரகாசமுள்ள சூரியன்போலும், விளையாட்டுக்களின் உயிர்போலும் அவர் மதிக்கப்படுவார். எல்லா வேளைகளிலும் மாணவரின்தளகர்த்தன்போலக் காணப்படுவார்.

தைரியமும், துணிகரமும் உடையவரானாலும் சாந்தமும், சிநேகமும் நிறைந்தவர். தேவசிநேகமும், ஆத்துமவாஞ்சையுமே அவருடையபரிசுத்ததனத்தைச் சுட்டிக்காட்டிநின்ற புண்ணியங்களாம். வாலிபருக்குரிய வேகம், துணிவு, மலர்ந்தமுகம் உள்ளவராய் எல்லாவற்றிலும் சருவேசுரனையும், அவர்நிமித்தம் ஆத்துமங்களையுமே அவர் நாடிநின்றாரெனத் தெரியவருகின்றது.

நன்றாக வேலைசெய்வார், செபஞ்செய்வார்,விளையாடுவார். ஆனால், ஓர்போதும் தேவனைமறவார். இவர் மாணவர்களுக்கு ஓர்மேல்வரிச்சட்டமாய் விளங்குவதால் அவர்கள் இவரைத் தங்கள் பாதுகாவலராகவும், சிநேகிதராகவும் தெரிந்துகொள்ளல் நன்று. தற்காலம் பாடசாலைப் பிள்ளைகள் எத்தனை ஆபத்துக்களின் நடுவில்சீவிக்கிறார்களோ, அத்தனை ஆபத்துக்களின்மத்தியில் அர்ச். தொமினிக்சவியோவும் சீவித்தார். ஆனால், அவைகள் தம்மை மேற்கொண்டுஆள அவர்ஒருபோதும் விட்டவரல்ல. எல்லா விபத்துக்களையும் மேற்கொண்டார்.

மாணவர்களின் கூட்டுறவிலிருந்து விலகித் தனிமையாய் அல்லது கவலைதுக்கம் கொண்டவராய் அவர்ஓர்போதுந்தோற்றமாட்டார். எல்லோரையும் பிரியப்படுத்துவதே அவரின் அலுவல். இவரின் சீவியசரித்திரத்தைக் கவனமாய்ப் படித்தால் தற்காலமாணவர்கள் அவரைத் தங்கள் பாதுகாவலராகவும், சிநேகிதராகவும் தெரிந்துகொள்வார்கள் என்பதற்கு ஐயமில்லை. மாணவர்கள் அர்ச். தொமினிக்சவியோவின் மதுரமானபெயரைத் தங்கள் இருதயங்களில் அழியா வண்ணம் வரைந்து, அவரைத் தங்கள் பாதுகாவலராகத் தெரிந்துகொள்வார்களாக.

---

● சீனதேச ஷாங்காய்நகரிலுள்ள கம்யூனிஸ்தசிறைச்சாலையொன்றில் வண. வி. ரிசோ-லியாங்சுவாமியார் இறந்துவிட்டதாக ஹொங்கோங்கிலே செய்தி கிடைத்திருக்கிறது. அச்சிறைச்சாலையில் இறந்த ஆறுவதுகுருவர் இவராவர்.

* * *

● பரிசுத்தபாப்பரசர் இத்தாலிய ஜனாதிபதியான சிஞ்ஞோர் எய்னோடி அவர்களுக்குக் "கிறீஸ்துவின் பிரதம மகிமைவரிசை" என்னும் மகிமைப்பட்டம்சங்மானித்திருக்கின்றார். இது22-ம் அருளப்பர்எனும் பாப்பானவராலே 1319-ம்ஆண்டு ஏற்படுத்தப்பெற்ற வத்திக்கானின் மகாஉந்நத மகிமைவரிசையாகும்.



## சதாசகாயமாதா கோணம்

### செபமாலையின் வல்லமை

அமெரிக்க ஐக்கியதேசத்திலே கைத்தொழிற்சாலைகள் நிறைந்த ஓர் பெரிய நகரம். பட்டணத்தின் தென்புறமாக ஒரு குருவானவரின் இல்லம். நேரம் நடுச்சாமம். குருவானவரின் ஆசறுதியான நித்திரையைப் பங்கப்படுத்தக் கூடியதாய் அவரதுமனையின் முன்கதவில் திடுதிடுஎன்று அடிக்கும் சத்தம். அதுஎன்னவாயிருக்கலாமென அறியும் பொருட்டுக் குருவானவர் தமது படுக்கைஅறையின் யன்னலைத் திறந்து எட்டிப்பார்த்தார். நடுவயது கடந்த ஒருமனிதன் கதவில் அடித்துக்கொண்டு நிற்கக்கண்டார். கண்டதே அந்தநடுநிசியில் என்ன அலுவல்? என்று அவனைக்கேட்டார்.

"சுவாமி! தயவுசெய்து கதவைத் திறவுங்கள்!" என்ற மறுமொழி கிடைத்தது.

"நீ யார்? உனக்கு என்ன வேணும்?" என்று கேட்டார் குருவானவர்.

"கெட்டவனும், பாதகனும் ஆகிய எல்லாம் நானே; சுவாமி, கெதியாகக் கதவைத் திறவுங்கள்! நான் பாவசங்கீர்த்தனம் செய்யவிரும்புகிறேன்" என்றான்.

இது குடிவெறியின் சேட்டையாயிருக்கலாமென எண்ணி அவனைக் கடத்தநினைத்தார் குருவானவர். யன்னலைப் பூட்டவும் எண்ணினார். "மனஆறுதல் கொடுக்கும் மனந்திரும்புதல்கள்பல நினையாத வேளைகளில், நேரங்கெட்டநேரத்தில் சம்பவிக்கின்றன" என்று அர்ச். பிலிப்புநேரியார் கூறிய அமுதவாக்கை நினைவுகூர்ந்து, தேவ உதவியுடன் இந்த நிர்ப்பாக்கியனுக்குச்செய்யக்கூடியதெதுவோ அதைச் செய்வோமெனத் தீர்மானித்துப் பாதி நம்பிக்கையோடும், பாதி சமுசயத்தோடும் கதவைத் திறக்கும்படி அதனண்டை சென்றார். கதவுதிறந்தது திறபடாமுன்னமே அந்தமனிதன் முழந்தாளில் விழுந்து, அலறிய குரலில்: "சுவாமி! எல்லாராலும், கைவிடப்பட்ட ஒருபாதகனை இதோ காண்கிறீர்கள்; நிர்ப்பாக்கியரில் நிர்ப்பாக்கியன் நான்; எல்லாவித பாவதுரோகங்களுக்கும் இருப்பிடம்நான்; பலமாதங்களாகக் கோவில்முகங் கண்டறியேன்; கடந்த இருபது வருடங்களாகப் பாவசங்கீர்த்தனம் செய்தறியேன்; ஆத்துமத்தின் சத்துராதியுடையஏவுதலால் இவ்வளவு காலமும் நான் செய்யாதபாவம் ஒன்றுமில்லை; கொலைபாதகம் ஒன்றைத்தவிர மற்றெல்லாப் பாதகங்களையும் புரிந்துள்ளேன்; இந்தநேரத்திலேதானும் பாவ அலுவலாய்ப் புறப்பட்டேன்; மரித்துப்போன எனதுதாயார் எனக்குத் தரிசனையாகி: 'மகனே! உடனே பாவசங்கீர்த்தனத்துக்குப்போ' என்றாள். இதோ வந்திருக்கிறேன்" என்று கூறிநின்றான்.

அம்மனிதன் குடிகாரன்போலத் தோன்றவில்லை. அவன் அன்றுகுடித்ததாகவுந் தெரியவில்லை. ஆனால், பதகளிப்போடிருந்தான் என்பதுமெய். குருவானவர் அவனை ஒருஅறைக்குக் கூட்டிச்சென்றார். அங்கே விம்மல் பொருமலோடு, மனஸ்தாபக்கண்ணீர் வழிந்தோடத் தன்பாவ மூட்டைமுடிச்சுகளையெல்லாம் ஒவ்வொன்றாக இறக்கினான். குருவானவர் பாவப் பொறுத்தல் ஆசீர்வாதங் கொடுத்த பின்னர்,

"சிநேகிதனே! உனது மனமாற்றம் அதிசயத்துக்குரியதே; அது எவ்வளவோ மனக்குளிர்ச்சியையும், ஆறுதலையுங் கொடுத்திருக்கிறது; இவ்விதம் சம்பவித்ததற்கு என்ன நியாயமிருக்கலாம்? நீ ஆண்டவரின் நாமத்தால் என்ன நற்கிருத்தியம் செய்திருக்கிறாய்?" என்று கேட்டார்.

"சுவாமி! நான் அடைந்த வரப்பிரசாதத்துக்கு ஒரேஒருகாரணந்தான் இருக்கலாமென நம்புகிறேன்; அதாவது, நான் இருபதுவயது வாலிபனாக இருந்தபோது, என்தாயார் மரணப்படுக்கையில் இருந்துகொண்டு, "ஒவ்வொருநாளும் நான் செபமாலை சொல்லாது விடமாட்டேன்" என்று வாக்குப்பண்ணும்படி என்னைக் கேட்டா. நான் படுபாவியாயிருந்தாலும், அழிவுப் பாதையின் அந்தம்மட்டாய் நடந்திருந்தாலும், நான் கொடுத்தவாக்கைப் பிரமாணிக்கமாக அனுசரித்து வந்திருக்கிறேன்" என்றான்.

அப்பாவி மனந்திரும்பிய இரகசியம் குருவானவருக்குப் புலப்பட்டு விட்டது. பாவிகளின் தஞ்சமும், செபமாலையின் இராக்கினியுமாகிய தேவதாயாருக்குக் குருவானவர் நன்றி செலுத்தினார்.

தான் முன்செய்த பாவங்களுக்கெல்லாம் தேவஉதவியோடு தன்னாற்கூடிய மட்டும் பிராயச்சித்தம் பண்ணுவதாகவும், பரிசுத்தமாதாவாம் திருச்சபையின் விதிகளுக்கமையத் தன் எதிர்கால சீவியத்தைத் திருத்திக்கொள்வதாகவும் வாக்குப்பண்ணிக் குருவானவரின் ஆசீர்வாதத்தைப்பெற்று நடுச்சாமம் வரையில்பச்சாத்தாபி தன்விடுதிக்குப் புறப்பட்டான்.

இது பலவருடங்களுக்குமுன் அல்ல, சிலவருடங்களின்முன்னமே அமெரிக்காவில் நடந்த பொய்க்கலப்பற்ற, உண்மைச் சம்பவம். நாமும் செபமாலையைத் தினமும்செபித்துச் சதாசகாயமாதாவின் அன்புக்கும், இரக்கத்துக்கும் நம்மைப் பாத்திரவான்கள் ஆக்கிக்கொள்ளப் பிரயாசப்படுவோமாக.

---

◎ புராதனரோமையிலே பிரபுக்கள் குலத்தைச்சேர்ந்த மாதர்கள் தங்கள் அழகு கதிக்கும்படியாகக் கழுதைப் பாலில் நீராடிவந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், சமீபத்திலே பிரபல நடிகையான ஜேன் றசெல்எனும்மாது அழகைவேண்டிப் பாலில் அல்ல, ஆனால், தேநீரில் நீராடிவந்து பலன் கண்டிருக்கிறாளாம்.

● ஆஸ்திறேலியாவிலே சிட்னிநகரில் ஈவா பேண்ஸைட்என்ற பாட்டி சென்றஆனிமாதம் 30-ந் திகதியன்று தனது நூறாவதுவருட பிறந்தபெருநாளைக் கொண்டாடினாள். இவள்தனது சீவியத்தில் பழவகையோ, மரக்கறியோ புசித்தறியாள். அவற்றிற்குப் பதில் உருளைக்கிழங்குகளையே சாப்பிட்டுவந்திருக்கிறாள். பாலும், உருளைக்கிழங்குமே தன்னைச் சுகபலத்துடன் காத்துவைத்தனவென்று இவள் கூறுகின்றாள்.

◎ சிட்னிநகரிலே கைகளும், கால்களும்இல்லாத கென்னெத் ஹொய்டன்எனும் மூன்றுவயதுள்ள முடப்பாலியன்ஒருவன் எந்தஒருபாட்டையும் சிலமுறைகேட்டபின் சரிவரஅதனைப்படிக்கின்றான். இதுவரைஅவன் நூறுபாட்டுகளுக்குமேல் படிக்கப் பயின்றிருக்கிறான். இவனுடைய சங்கீதத்திறமையைக்கவனித்து ஆச்சரியப்படாதார் இல்லையாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாண்டியன்தாழ்வு அர்ச். அன்னம்மாள் ஆலய 50-ம் வருட பொன் யூபிலி விழா

இப்பொன்யூபிலிவிழா நிகழும்ஆடி மாதம் 26-ந் தேதி திங்கட்கிழமை அர்ச். அன்னம்மாள் திருநாளன்று கொண்டாடப்பட விருக்கிறது. இவ் விழாவை முன்னிட்டு வழமையான திருச்சுரூப சுற்றுப்பிரகாரம் எல்லோரதும் வசதியைக்கருதி 25-ந் திகதி யாகிய முதல்நாள் ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் 4 மணிக்கு ஆரம்பமாகி, செட்டியதெரு, ஈச்சமோட்டை, மறவகுளம், சுண்டிக்குளித் தெருக்கள்வழியாக நடந்தேறும். யூபிலிவிழாவிலும், திருநாளிலும், சுற்றுப்பிரகாரத்திலும் அர்ச். அன்னம்மாளின் பக்தர்கள் சிறப்பாகக் கலந்துகொள்வார்களாக!

முகாந்திரம் F. J. R. விக்கிரம சிங்கம் அவர்களின் முதலாம்வருட

## மரண ஞாபகம்



பிறப்பு:

18-12-1899.

இறப்பு:

21-7-1953.

"நித்திய இளைப்பாற்றியை இவருக்குத் தந்தருளும்; முடிவில்லாத பிரகாசம் இவருக்குப் பிரகாசிக்கக்கடவது; சமாதானத்தில் இளைப்பாறுவாராக."

பத்தாவை இழந்து
பரதவிக்கும்
**பாரியார்**

## மாதோட்டத் தபால்

(நாட்டுத்தூதன்)

ஐயா! "காவல"னிலே தூதன் சில கருமங்களை உடனே சுட்டிக்காட்டி வெளியிடுவது எவரையுமே பரிகாசஞ் செய்வதற்கல்லவாம். எவரிலுமே அவிகாயங் கொண்டுமல்லவாம். ஆனால், நாட்டை நன்கு முன்னேற்றமடையச் செய்யவேண்டுமென்ற நல்லநோக்கம் பற்றித்தானும். ஆகவே, இதையிட்டு எவருமே குறைவிளங்கப் படாதாம். நாட்டின் நல்லமுன்னேற்றத்தில் எல்லோரும் கண்ணுங்கருத்துமாக இருக்கவேண்டுமென்பதே அவனின் வேண்டுகோளாம். நிற்க, சென்ற 15-ந் திகதி பிற்பகல் புதிய நிதிமந்திரியார் மன்னார்ப்பட்டினத்திற்கு விஜயஞ் செய்தார். அவருடன் மன்னார்ப் பிரதிநிதி திரு. சி. சிற்றம்பலம்அவர்களும் கலந்துகொண்டார். மந்திரியாருக்கு அர்ச். சவேரியார் கல்லூரி மண்டபத்திலே ஓர்வரவேற்பு அளிக்கப்பட்டது. அதிலே மன்னார் — மாதோட்ட மூப்புச்சுவாமியார் அதி வண. எஸ். பீற்றர், பட்டினசங்கதலைவர் திரு. வி. ஏ. அழகக்கோன், மன்னாரின் முன்னாள் அதிகாரம், சவேரியார் கல்லூரிஅதிபர் சங். பிறதர் சீசர்ஆகியவர்களும், மற்றுஞ்சிலரும் பேசினின்றார்கள். அவர்களின்பேச்சிலே மல்வத்தைஓயாத்திட்டம் அடங்குவதாயிற்று. இத்திட்டம் பலவருடகாலமாகப் பேச்சளவில்தான் நிற்கின்றதல்லாது காரியத்தளவில் இன்னுமே கைகூடவில்லை. கைகூடுமாயின் மாதோட்டம் பெருமைவாய்ந்தஓர் மகாதோட்டமாகவிளங்குமாம்.

தலைமை ஆசிரியர் மகாநாடு — மன்னார் – மாதோட்டப் பகுதியைச் சேர்ந்த பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள்மகாநாடு சென்ற 26-6-54 சனிவாரம் மன்னார், அரசினர் கனிஷ்ட பாடசாலைமண்டபத்திலே வித்தியா தரிசி எஸ். நவரத்தினம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதிலே சங்கீதவிழா, 3-ம் 4-ம் வகுப்புகளின் பொதுப்பரீட்சை, ஆசிரியர்களின் பத்துநாள் பயிற்சிக்கழகம், சுவபாஷா விஞ்ஞானவகுப்பு என்பனபற்றி ஆலோசிக்கப்பட்டது. மற்றுஞ்சில விஷயங்கள் ஆராயப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

சம்பேதுருவானவர் திருநாள் — உயிலங்குளத்திலே கோயில்கொண்டிருக்கும் சம்பேதுருவானவர்திருநாள் சென்ற 29-6-54 செவ்வாய்க்கிழமை இவ்வூர்வாசிகளால் வழமையிலும் பார்க்க அதிசிறப்பாய்க் கொண்டாடப்படலாயிற்று. திரிதினவிழாக்களைத் தொடர்ந்து திருநாள்பாடற்பூசையும், பின்னர் திருச்சுரூப சுற்றுப்பிரகாரமும் நடந்தேறின. இம்முறை இத்திருநாளைத் தலைமைவகித்து நடத்தியவர் தற்போதைய கட்டளைக்குரவர் வண. எச். மொறேறு சுவாமியவர்களே. இந்தோசீனயுத்தத்தில் மடிந்துவிட்டாரென நம்பப்பெற்றஇவர் தேவாதீனமாகத் திரும்பவும்எம்மிடையே வந்து சேர்ந்தமை நாம்பெற்ற அதிர்ஷ்டமே எனலாம்.

தங்கச்சுரங்கம் — மகாவந். நமது மேற்றிராணியாணடவர் இப்பகுதியிலுள்ள வண. குருப்பிரசாதிகளுடன் கலந்தாலோசித்து மன்னார்-வவுனியாப் பகுதிக் கத்தோலிக்கமக்களின் நலனைக்கோரி ஸ்தாபித்த இலாபநிதிச் சங்கமே இத்தங்கச்சுரங்கமாகும். இதுசம்பந்தமான ஆலோசனைக்கூட்டங்கள் இம்மாதம் 2-ந் திகதி ஆரம்பமாகி நடைபெற்றுவருகின்றன. இதனை மன்னார் – வவுனியாப்பகுதிக் கத்தோலிக்கமக்கள் கண்ணென மதித்துக் கருத்தாகநடத்திவந்தால் அவர்கள் பிறரிடம் கடன் அடிமைப்படுதல் ஓரளவில்நீங்கி விடுதலைபெறுவார்களென்பதில் ஐயமில்லை.

லோறி விபத்து — முருங்கனைச் சேர்ந்த C. Y. 7232-ம் நமபர் லொறியானது அதில்வேலைசெய்யும் கூலியாட்களைஏற்றிக்கொண்டு சென்ற 13-ந் திகதிமாலை மன்னாரிலிருந்து முருங்கனை நோக்கி வந்துகொண்டிருந்தபோது உயிலங்குளத்திலுள்ள உழும்யந்திரக்கலப்பைகளின் நிலையத்திற்குச் சமீபமாக ஓர்மாட்டுவண்டிக்கு வழிவிலகிக்கொடுக்கும்போது பக்கத்திலுள்ள பூவரசமரத்துடன் மோதிப் புரண்டதால அதன் மேற்கூடாரமும், எஞ்சினும் நொருங்கிவிட்டன. அதிலிருந்த கூலிக்காரருள்இருவர் கடின காயங்களுடனும், ஏனையோர் சிறு காயங்களுடனும் உடனேதானே மன்னார்ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். இந்தக்கோரவிபத்துக்குக் காரணம், சாரதியின் மிதமிஞ்சிய மதுவெறிதானும். லொறியும் மணித்தியாலம் 70 மைல்வேகத்தில் செலுத்தப்பட்டதாம்.

பெரியகோவில்— இப்பகுதியிலே புராதனகாலந்தொட்டுப் பெரியகோவிலென அழைக்கப்பட்டுவந்த பறப்பாங்கண்டல் பரிசுத்த கூட்டத்துமாதா கோவிலைப் புதுப்பிக்கும்திருப்பணி ஓரளவிலே முடிவுபெற்றுவரக் காண்பது சந்தோஷமே. இஃது இங்குவாழும் குருகுலக் கத்தோலிக்கமக்களுக் குரியதாகும். இவர்களின் அயராமுயற்சியாலேயே இது புதுப்பிக்கப்பட்டுவருகிறது. இது மாதோட்டத்திலுள்ள புராதன கோவில்களுள் ஒன்றும், போர்த்துக்கேயரால் அப்போதுகட்டப்பட்ட பாரியகோயிலுமாகும்.

பஸ்பிரயாணம் — இப்பகுதியிலே நடைபெற்றுவரும் பஸ்பிரயாணசேவைகளைக் கவனிக்கும்போது, சனங்களின் சௌகரியத்திற்காகப் பஸ்சேவை அல்ல, ஆனால், பஸ்சேவைக்காகவே சனங்கள் இருக்கிறார்கள்போல் தோற்றுகின்றது அத்துடன் பிரயாணிகள் சிலவேளைகளில் அடிமைகள் போல நடத்தப்படுவது பெரியமனவேதனையைத் தருகின்றது. விசேஷமாகத் தினமும் மன்னாரிலிருந்து மாலை 7 மணியளவில் புறப்படும் தபால்பஸ்ஸில் பிரயாணிகள் பெரிதும்கஷ்டப்படுகின்றார்கள். இதற்கு முக்கியகாரணம் அதனைத்தொடர்ந்து மக்களின்பிரயாணத்திற்கு வேறுபஸ்வசதி கிடையாமையே. அதனால் தபால்பஸ் புறப்படுமுன் முருங்கன்வரையும் மற்றோர் பஸ்சேவையை நடத்துதல் மக்களின் பிரயாணத்தை எவ்வளவோ இலகுவாக்கும்.



## பெரியகட்டு அர்ச். அந்தோனியார் திருநாள்

ஆவணி ஞாயிறு 1-ந் திகதி.

ஆயத்தத் திரிதினங்கள்: ஆடி 29, 30, 31.

பகற்கோச்சிகள் பெரியகட்டுக்கோவிலடியில் ஆடி 29-ந்திகதி தொடக்கம் ஆவணி 2-ந் திகதி மட்டும் நிற்பாட்டப்படும்.

மடுறோட், கட்டளைச் சுவாமியார்.



# பல தேசங்களில்

### ஸ்பெயினில் முடியரசா?

ஸ்பெயினிலே முடியரசுமுறையான ஆட்சிஒன்றைத் திரும்பவும் அமைப்பதற்கான திட்டம்பற்றி ஸ்பானிய அரசாங்கதலைவரான ஜெனறல்பிறுங்கோ ஆலோசித்துவருகின்றார். காலஞ்சென்ற 13-வது அல்போன்ஸ்அரசரின பௌத்திரரான 16வயதுடைய ஜுவான் கார்லோஸ்இளவரசர் ஜெனறல் பிறுங்கோஅவர்களைச் சமீபத்திலே கண்டுபேசித்திரும்பியதானது அதற்கோர் முதல்நடவடிக்கையாகுமென நம்பப்படுகிறது. இளவரசரைச் சிம்மாசனத்தில் ஏற்றும்விஷயமாய் அவர் மூவிதபயிற்சிகள் அளிக்கப்படவேண்டுமென ஜெனறல்பிறுங்கோ கருத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகிறது. அவற்றில் (1) இளவரசர்என்று யாதாமோர் இளக்காரமுமில்லாது ஸ்பானிய கடற்படை, அல்லதுதரைப்படையில் அவர்ஓர் கடெற்அதிகாரியாகச் சேவை செய்யவேண்டும். (2) மதிரித் சர்வகலாசாலையில் இரண்டுவருடம் பயிற்சிபெறவேண்டும். (3) இருவருடம் தொழில்நுட்ப பயிற்சியடையவேண்டும். அதன் மேல்அவர் அப்போது67 வயதுடையவராகும் ஜெனறல்பிறுங்கோவுடன் நெருக்கமாகஇணைந்து ஆட்சிவிஷயங்களில் ஈடுபடவேண்டும்.

### சோதிடத் தோற்றுநோய்

இந்தியபிரதமர் பண்டிதநேருஅவர்கள் இம்மாதம் 8-ந்திகதியன்று நாங்கல்எனுமிடத்தில் நிகழ்ந்த ஓர்கூட்டத்தில்பேசியபோது, சோதிடம்பார்ப்பதின் தீயவிளைவுகளைக் குறிப்பிட்டுக் கூறியது வருமாறு:— பொறுப்புவாய்ந்த பதவிகள்வகித்திருக்கும் பகுத்தறிவு படைத்த ஒருசிலர்தானும் தங்கள் எதிர்காலத்தை அறிந்துகொள்ளவேண்டிச் சோதிடம்பார்ப்பதைக்காண நான் மனம்வருந்துகிறேன். இவ்வாறு அவர்கள் நடந்துகொள்வது பெரிதும் வேடிக்கையாகவே இருக்கிறது. நட்சத்திரபலன்களையும், நட்சத்திரநிலைகளையும்நம்புவதாலே நமக்கு எவ்விதஉதவியும் ஏற்படாது. வருந்திஉழைத்து நமது சொந்தவலிமையினாலேயே நாம் வாழ வேண்டும்என்பதே.

### "அயல்நாட்டு நாய்"

சீனாவிலேமுன்னர் ஹுப்பேநகரின் அப்போஸ்தலிக்க சிரேஷ்டராயிருந்த மொஞ்சிஞ்ஞோர் மோறீஸ் கன்னட்டன்சுவாமியார் நாடுகடத்தப்பட்டுத் தற்போதுஹொங்கோங்கில் தங்கியிருக்கின்றார். இவரைச் சீனாவிலிருந்து வெளியேற்றுமுன் கம்யூனிஸ்தர்கள் நடத்திய விசாரணைஒன்றிலே, அதிகாரிஒருவன் இவரை அடிக்கடி "அயல் நாட்டுநாயே" என்று அழைத்தான். பின்னர் விசாரணையின்நடுவிலே அந்த அதிகாரி அங்குசுவரில் தொங்கிக் கொண்டிருந்த ஸ்ராலினின்படத்தைச் சுட்டிக்காட்டி: "அந்தப் படத்தில் இருக்கிறவர்யாரென்று உனக்குத்தெரியுமா?" என்றுகேட்டான். சுவாமியார் அந்தப்படத்தை உற்றுப்பார்த்துவிட்டு: "கனம். நீதிபதிஅவர்களே, இந்தமனிதனும் என்னைப்போல ஓர் அயல்நாட்டு நாய்தான்" என்று பதிலளித்தார். அன்றையவிசாரணை அத்துடன்நிறுத்தப்பட்டது.

### பயிற்சிபெறும் பொலிஸ்நாய்கள்

லண்டன்நகரிலே பொலிஸ்பயிற்சிநிலையம்ஒன்றில் பன்னிரு நாய்கள் ஜோர்தான் நாட்டுப் பொலிசாருடன் சேர்ந்து கிறிமினல் குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கத்தக்கதாய் அராபிய பாஷையிலே கட்டளையிட்டபடிசெய்வதற்குப் பயிற்றப்பட்டுவருகின்றன. கிறிமினல்களைக் கண்டுபிடிக்கும் விஷயமாய் அதிகம்பிந்திய புதியமுறைகளை அறிந்துகொள்ளும் நோக்கமாய்த் தற்போது ஜெருசலேமிலிருந்து அங்கு சென்றிருக்கும் லெவ்ரினன்ட் ஏஸாயிர் சனன்கிறிஎன்பவருடன் பழகிக்கொள்ளவும் இவைகள் பயிற்றப்படுகின்றன. இரண்டுமாதகாலம் பயிற்சியடைந்தபின் இந்தப்பொலிஸ்நாய்கள் ஜோர்தான்நாட்டுக்குக் கொண்டுபோகப்படும்போது கிறிமினல் குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கென அங்கு பாவிக்கப்படும் முதற்பொலிஸ்நாய்கள் இவைகளாயிருக்கும். பிரித்தானியபொலிசரால் பாவிக்கப்படும் நாய்களுக்குப் போலவே இவற்றிற்கும் பயிற்சியளிக்கப்படுகின்றன.

— சமீபத்திலே பர்மியஅரசாங்கம் றோமாபுரிக்கு அதிகாரபூர்வமாக அனுப்பிவைத்த கத்தோலிக்ககுருமார், பிறதர்மாரின் தூதுக்கோஷ்டிக்குத் தலைமைவகித்துச்சென்ற அதிவண. ஜே. யோசெவ்சுவாமியவர்கள் மண்டலேநகரின் துணைமேற்றிராணியாராக நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். மேற்றிராணித்துவபதவிக்கு உயர்த்தப்பட்டுள்ள முதற் பர்மியகுருவானவர்இவரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாலர் பக்கம்

## அண்ணா சொல்வது:

அருமைச் சகோதரங்களே!

சென்ற வெள்ளிக்கிழமை நான் தலைமை ஆசிரியர் ஞானத்தைச் சந்திக்கச் சென்றேன். நேரம் நாலுமணி இருக்கும். அங்கே தலைமை ஆசிரியரின் மேசையைச் சுற்றி ஈ மொய்த்தது போலப் பிள்ளைகள் மொய்த்துக் கொண்டு இருந்தார்கள். என்ன விசேஷம் என்று விசாரித்தேன். எல்லோரும் "நானும்", "என்னுடைய பெயரை எழுதவில்லை உபாத்தியாயர்" என்று சொன்னார்களே அல்லாமல், செய்தி கூறுவார் ஒருவரும் இல்லை.

இரைச்சல் எல்லாம் முடிந்து பிள்ளைகள் கலையுமட்டும் காத்திருந்தேன். கடைசியாக "அடுத்த வியாழக்கிழமை எல்லோரும் பெயர்களைக் குறித்துப் போடவேண்டும்; காசும் அத்துடன் வரவேண்டும்" எனக் கூறிப் பிள்ளைகளை அனுப்பி விட்டார்.

பின் என்னைக் கண்டார். "வாருங்கோ அண்ணா! எப்படிச் சௌக்கியம்?" என்றார். "ஏதோ சோதனையா?" என்றேன்.

"இல்லைப் பாருங்கோ, பிள்ளைகளை நாங்கள் மடுவுக்குக் கூட்டிக் கொண்டு போகிறோம்—யாத்திரையாக; பெயர்வழிகளை அறிந்தால்தான் தொகையை அறிவிக்கலாம்; இம்மாதம் 25-ந் திகதிக்குமுன் அறிவிக்க வேண்டும்; அதனால்தான் இன்றைக்குப் பிள்ளைகளுக்கு அறிவித்தேன்."

"இப்படி எல்லாப் பாடசாலைப் பிள்ளைகளும் போகிறார்களா?"

"ஆமாம், கூடியளவு போவார்கள்; இது மரியாயின் வருட மாணவர் யாத்திரை."

"ரொம்பச் சிறப்பாய் இருக்கப் போகுதே!" என்றுவிட்டு, என் அலுவலையும் முடித்துக் கொண்டு வந்தேன்.

உங்கள் அன்புள்ள, அண்ணா.

## ரோசாவும் முள்ளும்

—: ஜெயம் :—

உதயநேரம். சூரியன் உலகைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டுக்கொண்டிருந்தான். அந்த ரோசா மலர்ந்தது. நறுமணம் காற்றில் எங்கும் பரந்தது. போவார், வருவார் எல்லாம் அதன் அருகில் நின்று சுகந்தத்தை அனுபவிப்பர். அதன் அழகையும், மென்மையையும் மெச்சிப் புகழ்வர். வண்டுகள் சுற்றிச் சுற்றி இன்னிசை பாடும். வண்ணாத்திப் பூச்சிகள் சாமரம் வீசும். ரோசா இவற்றையெல்லாம் பார்த்துப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமையும் கொண்டு கூத்தாடியது. பூக்களுக் கெல்லாம் தானே அரசியென்ற கர்வமும் அதற்குத் தலைக்கேறி விட்டது. "புஷ்பங்களின் இராசாத்தி—பூங்காவின் பொன்மகளே" என்று யாரோ பாடிய ஒரு பாடலின் அடியை மெல்லத் தன் வாய்க்குள்ளே பாடிக் கொண்டு ஆடத் தொடங்கியது.

தோட்டக்காரச் சுப்பன் வழக்கம் போல நீர்வார்க்க அங்கு வந்தான். ரோசாவின் புன்னகையும், பாடலும், ஒய்யாரமும் அவனுக்கும் பெரும் அதிசயத்தை உண்டுபண்ணின.

"சுப்பா! எப்படி என் அழகு?" என்று ரோசா பெருமை ததும்பக் கேட்டது. சுப்பன் பல்லெல்லாம் காட்டிச் சிரித்தான். "எப்போதும் முட்களின் நடுவே இருக்க எனக்குப் பிடிக்கவில்லை சுப்பா; எந்தப் பக்கம் சரிந்தாலும் முட்கள்; முட்கள் முட்களாகவே இருக்கின்றன; இந்த உபத்திரவம் எத்தனைகாலம் சகிக்கலாம? என் அழகு, மானம், மதிப்பு எல்லாம் இந்தமுட்களால் மண்ணாகப் போகின்றன; இவற்றைச் சீவி எறிந்துவிட்டால் சிங்காரமாயிருக்கும்" என்று கோபத்தோடு சீறியது ரோசா.

ஒவ்வொரு முள்ளாகச் சீவத்தொடங்கினான் சுப்பன். "முற்றாகச்சீவு சுப்பா முற்றாகச்சீவு; ஒருமுள்ளும் தப்பாது சீவிவிடு" என்று ரோசா உத்தரவிட்டுக்கொண்டேயிருந்தது.

உத்தரவை மீறமுடியாமல் சுப்பன் சீவிக்கொண்டேயிருந்தான். "போதும், போதும் நிறுத்தடா" என்று புலம்பியதுரோசா. பாதி மொட்டையாகி, மேற்றோல் இழந்தசெடி சோர்ந்து, காய்ந்து, கருக ஆரம்பித்தது. பகலவன் சிரித்தான், பரிகசித்தான். அவனது பரிகாசத்தைத் தாங்கிக் கொள்ள ரோசாவால் தாளவில்லை. நாணத்தாலும், அவமானத்தாலும் குன்றித் தலைகுனிந்தது.

சுப்பனுக்குக் கண்களில் நீரூறியது. கருகிய அந்தச் செடியைப் பிடுங்கி வீதியில் எறிந்தான்.

(உருவகக்கதை)

## ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்கள்

பொய்த் தீர்க்கதரிசிகளைப் பற்றி எச்சரிக்கையாய் இருங்கள்; இவர்கள் ஆட்டுத்தோல் போர்த்த ஓநாய்கள் போன்றவர்கள்; அவர்களால் நன்மை எள்ளளவேனும் உண்டாகுமென்று நம்பி யிராதேயுங்கள் என்றார் யேசு.

முட் செடியிலிருந்து முந்திரிகைப் பழம் பறிக்க முடியுமா? நல்லமரம் நல்லபழங் கொடுக்கும்; நச்சுமரம் நச்சுப் பழத்தையே தரும். நல்ல பழங் கொடாத மரங்களை வெட்டிச் சுட்டெரிப்பார்கள். ஒவ்வொருவருடைய கிரிகைகளிலுமிருந்து நன்மை தீமையை அறியலாம்.

ஆண்டவரே, ஆண்டவரே என்று ஓலமிடுகிறவர்கள் மோட்சஞ் சேருவதில்லை; என்பிதாவின் கட்டளைகளை அனுசரிப்பவர்கள் மாத்திரம் மோட்சஞ் சேருவார்கள்.

(ஞாயிறு சுவிசேஷத்தைக் கவனிக்கவும்)

## யானையின் நிறை

முன் ஒருகாலம் மேருஎன்று ஒரு அரசன் இருந்தான். அவன் செல்வமும், பராக்கிரமமும் உள்ளவன். அவ்வூரில் ரூபன் என்று ஒருபுத்திமானும் இருந்தான். அவன் தனது புத்திக்கேற்ற நற்குண முள்ளவன். அரசன் தனக்கு என்ன கஷ்டம் நேர்ந்தபோதிலும் அதை ரூபனுக்குச் சொல்லித் தீர்த்துக்கொள்வான். எக்கருமத்தையும் நுட்பமாய் ஆராய்ந்து அறியும் வல்லமை ரூபனுக் கிருந்தது. ஆகையால், அரசன் ரூபனுக்கு அதிக சன்மானம் அளிப்பான். ரூபனும் இராசகுமாரன் போல் சீவித்துவந்தான்.

ஆயினும் ரூபனுக்கு எப்போதும் மனதிற்பயம். எப்போதாவது பிழை விட்டால், அல்லது தப்பானயோசனை கூறினால் அரசன் என்னசெய்வானோ? ஏன், வாளுக்கே இரையாக்குவான்.

மேரு அரசனின் மாளிகையில் கிமென்என்று ஒருமந்திரி இருந்தான். ரூபனுடைய புத்திநுட்பத்தையும், கீர்த்தியையுமிட்டு அவனுக்கு மிகவும் வயிற்றெரிச்சல்.

ஒருநாள் அரசன் தனது மாளிகைத் தோட்டத்தில் உலாவிக்கொண்டிருந்தபொழுது கிமென்வந்து: "அரசே, நீடூழிவாழ்க! ரூபன் தங்களிலும் புத்திமானானபடியால் அவனே நாட்டை ஆளவேண்டும்என்று சனங்கள் சொல்லிக் கொள்ளுகிறார்கள்" என்றான். அரசனுக்குக் கோபம்வந்தது. "நான் ரூபனைக்கொன்றால் சனங்கள் எல்லோரும் கிளர்ச்சி செய்வார்கள்; ஆகையால், அவனுக்குக் கஷ்டமானதோர் வேலைகொடுப்பேன், செய்யமுடியாதபொழுது அவனைக் கொலைசெய்யலாம்."

சற்று யோசித்துவிட்டு: "கிமென்! ஒருயானையை நிறுக்க உன்னால் முடியுமா?"

"யானையையாவது, நிறுக்கவாவது! யாரால்முடியும்? கோதுமைச்சாக்குகளை நிறுக்கத் தராசுகள் உண்டு. ஆனால், யானையைநிறுக்கத் தராசுக்கு எங்கேபோவது?" என்றான் மந்திரி.

உடனே அரசன் ரூபனை அழைத்து: "எனது பட்டத்து யானையின் நிறையை அறியவிரும்புகிறேன்; இன்றே மறுமொழி தரவேண்டும்" என்றான்.

"அரசே, யானையைநிறுக்கத் தராசுகள் இல்லையே" என்றான்ரூபன் பணிவாக.

"நீ புத்திமானாயிருந்தால் அதன் நிறையைக் கண்டுபிடி பார்க்கலாம்."

"ஆம் அரசே! அதற்கேற்ற தராசுகளைச்செய்து ஒருகிழமைக்குள் மறுமொழி கூறுகிறேன்."

"இன்று மத்தியானம் மறுமொழி சொல்லவேண்டும்; இல்லாவிடில் நடப்பது தெரியுந்தானே."

"தராசுசெய்ய மூன்றுநாட் தவணை தரவேண்டும்; அதற்குமுன் ஒன்றுமே முடியாது."

"இன்றுமத்தியானம்; ரூபன்! ஒரு விநாடி தானும் பிந்தக்கூடாது."

அரசனுடைய கோபத்திற்குக் கிமென்தான் காரண மென்று நினைத்துக்கொண்டு ரூபன் ஆற்றங்கரையோரமாய் நடந்துபோனான். துறைமுகத்துக்குச்சென்று: "இன்னும் ஒரு மணித்தியாலச் சீவியந்தான் உண்டு" என்று எண்ணிக்கொண்டு யோசனையுடன் உட்கார்ந்தான்.

அவ்வேளை அவன் பெரியபடகுகளிலிருந்து கோதுமைமூடைகளை இறக்கிக்கொண்டிருந்த மனிதரைக் கண்டான். அப்படியே யோசித்துக்கொண்டிருக்கச் சூரியனும் உச்சிவானத்தை அடையும்நேரமாயிற்று. சடுதியாய், "தெரியும்! தெரியும்!! யானையின் நிறையை அறிய எனக்குத்தெரியு" மென்று கூறினான். "அதுமாத்திரமா! கிமென் எனதுசத்துராதி என்றதையும் நிரூபிக்கிறேன்."

பின்னர் மேருவின்பட்டத்துயானையை ஓர்படகில் ஏற்றினார்கள். படகு தண்ணீரில் தாழ்ந்தது. "இந்தச்சுண்ணாம்பால் தண்ணீர் நிற்கிறஇடத்தைப் படகில்குறியுங்கள்" என்றான் ரூபன். அதன்பின் "யானையை வெளியேற்றுங்கள்" என்றான். யானை வெளியே வந்ததும் படகுமிதந்தது. "இப்பொழுது கோதுமைமூடைகளைப் படகில் ஏற்றுங்கள்; ஒவ்வொரு மூடையும் நூறுறாத்தல் நிறைகொண்டது; சுண்ணாம்பால்இட்ட அடையாளம்வரையும் படகுதாழ்ந்தால் யானையின்நிறையை அறியலாம்."

"நான்மூடைகளை எண்ணுகிறேன்" என்றான் உதவிக்குவந்த கிமென்.

"சரியாய்க் கணக்கிடவேண்டும்" என்றான் ரூபன். "கூட எண்ணப்படாது."

(அடுத்த பக்கம் பார்க்க)

## பாட்டி சுட்ட அப்பம்

'ஜெயம்'

1
பாட்டி எங்கள் பாட்டி
பத்து அப்பம் சுட்டாள்
கேட்டு ஒன்று தின்றேன்
கிடந்த தொன்ப தப்பம்

2
தங்கை அங்கு வந்தாள்
தானும் ஒன்று தின்றாள்
அங்கு மீதி யுள்ள
அப்பம் எட்டு ஆகும்

3
பாலு ஓடி வந்தான்
பாட்டி காகம் என்றான்
மேலே பாட்டி பார்க்க
மெல்லத் தின்றான் ஒன்று

4
பாலு தின்ற பின்பு
பாட்டி தட்டைப் பார்த்தாள்
ஏழு அப்பம் என்று
எண்ணி எண்ணி வைத்தாள்

5
வேலு ஓடி வந்தான்
வேணும் அப்பம் என்று
நாலு காலில் நின்று
ஏழில் ஒன்று தின்றான்

6
அப்பம் ஆறு என்று
அடுக்கி வைத்தாள் பாட்டி
கொப்பில் உள்ள காக்கை
கொண்டு சென்ற தொன்று

7
பத்தில் ஐந்து போகப்
பாக்கி அப்பம் ஐந்து
அத்தனையும் தின்றாள்
அந்த வீரப் பாட்டி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நான் ஒன்றைத்தானும் கூட்டிக் கணக்குச்சொல்லிவிட்டால், அவன் தோல்வியடைவான்" என்றுகிமென் தனக்குள் சொல்லிக்கொண்டான். மூடைகளைக் கப்பலிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தவர்களைக் கவனிப்பவன் போலக் காணப்பட்டாலும் ரூபனும் மூடைகளை எண்ணிக்கொண்டேயிருந்தான்.

பன்னிரண்டுமணிக்கு இன்னும் ஐந்துநிமிஷங்கள் இருக்கச் சுண்ணும்பு பூசப்பட்ட அளவிற்குப் படகு தண்ணீரில் தாழ்ந்தது. "நூற்றிரண்டு சாக்குகள்" என்று கிமென் உரத்துக் கூறினன்.

"யானை நூற்றிஇரண்டு சாக்குக் கோதுமை நிறையுள்ளது."

"மெத்தப்பெரிய உபகாரம்" என்றான் ரூபன்; ஆனால், அவன் "ஒன்றைக்கூட்டி எண்ணிப் போட்டான" என்று தனக்குள் சொல்லிக்கொண்டான்.

பன்னிரண்டுமணிக்குமுன் ரூபன் அரண்மனையையடைந்து அரசன்சமுகஞ்சென்றான். கிமென் அரசனுடைய காதில் ஏதோ சொன்னன்.

"இராசாவே வாழ்க! உம்முடைய பட்டத்துயானை நூற்றிரண்டுசாக்குக் கோதுமை நிறையுள்ளது" என்று கிமென் சொன்னதொகையையே அவனும்சொன்னன். அந்நேரம் மூரசறையப் பட்டது; பன்னிரண்டு மணியாயிற்று.

அப்பொழுதுஅரசன்: "யானையின் நிறையை அறியக்கூடுமானாலும் உனக்கு எண்ணத்தெரியாது; ஒன்றைக்கூட்டிச் சொல்லிவிட்டாய்; ஏமாந்துபோனுயே" என்றான்.

ரூபன் அமைதியுடன்: "படகிலிருந்த மூடைகளின் தொகையைக் கிமென் உமக்குச்சரியாய்ச் சொல்லியிருக்கிறான்; எனக்கு நூற்றிரண்டு என்றுதான் சொன்னன்; நானும் மூடைகளை எண்ணினேன் என்றதை அவன் உமக்குச்சொல்லவில்லை; ஆற்றங்கரையிலிருந்து இங்குவருமளவும் யானைக்கு ஒருமூடைகோதுமை சாப்பிடக்கொடுத்தேன்; ஆகையால் இப்பொழுது அதன்நிறை ஒருமூடை அதிகமாகத்தான் இருக்கும்.

அரசனுக்குப் பகிடிபிடித்துக்கொண்டது. கிமெனைப்பார்த்து: "ரூபனுக்குப் பொய்சொன்னது எனக்குச் சொன்னதிற்குச்சரி; ரூபன் தோல்வியடைந்தால் உனக்கு ஒருபுதுஉத்தியோகந் தருவதாக வாக்களித்தேன்; ரூபன் வெற்றியடைந்தானாயினும் உனக்கு ஒருபுதுஉத்தியோகம் தரச்சித்தமாயிருக்கிறேன்; ஆகையால், இன்றுதொடக்கம் நீ மந்திரிபதவியை விட்டு, பட்டத்துயானையைப் பார்வையிடும் பாகனுகவிருப்பாய்" என்றான். அரசனுடைய முகத்தில் ஓர்ஏளனச் சிரிப்பு தோன்றிற்று.

— எம். ஜெயம்

## சரியான விடைகள்

சரியானவிடைகள்: (1) 10 ரூபா (2) பூக்கள் 3 கிளிகள் 4 (3) 22 எலுமிச்சம்பழங்கள் (4) 6 தேங்காய்கள் (5)4 மைல். சரியானவிடை அனுப்பியவர்களின் நாமங்கள் வருமாறு:

1. எஸ், பத்திநாதன், மாதகல்.
2. ஞா. மரியதாஸ், புங்குடுதீவு.
3. ஏ. நீக்கலஸ் டயஸ், அர்ச். மர்த்தீனூர் குருமடம், யாழ்ப்பாணம்.
4. ஞா. செபஸ்ரியன் பச்சேக், அர்ச். மர்த்தீனூர்குருமடம், யாழ்ப்பாணம்.
5. பொ. ஐயம்பிள்ளை, ஆர். சி. பாடசாலை, புதுக்குடியிருப்பு.
6. எவ். ஜே. துரைராஜா, ஆஸ்பத்திரி ரோட், புங்குடுதீவு.
7. வெர்பொனு எலன், எஸ்., மாதகல்.
8. ஆ. மொனிக்கா குலாஸ், வங்காலை.
9. லூ. பர்ணபாஸ், ஆர். சி.பாடசாலை, அரிப்பு.
10. கி. செபமாலை சோசை, அர்ச். அன்னம்மாள் ஆண்பாடசாலை,வங்காலை.
11. ஆ. சேவியர் குலாஸ், அர்ச். அன்னம்மாள் பாடசாலை, வங்காலை.
12. மி. மரியதாஸ் குலாஸ், அர்ச். அன்னம்மாள் பாடசாலை, வங்காலை.
13. ஜே. பிளசம், வல்வெட்டித்துறை.
14. ம. இராசநாயகம், நாவற்கொட்டியன் கமம், ஆனையிறவு.
15. வ. பீற்றர்,ஆர். சி. பாடசாலை,வதிரி.
16. மி. அ. யேசுதாசன், அடப்பன் ரோட், யாழ்ப்பாணம்.
17. சு. அல்பிறெட், சில்லாலை.
18. ச. செசிலியம்மா, ஆர். சி. பாடசாலை, முதலியாகுளம்.
19. ச. ம. றிச்சேட், ஊர்காவற்றுறை.
20. பே. ஊர்சிலா ஆர். சி. பாடசாலை, சுருவில்.
21. ரூசலின் சூசைப்பிள்ளை, அகஸ்ரீன் லேன், இளவாலை.
22. எம். ஜே. கீதபொன்கலன், 'லூட்ஸ் மாளிகை,' இளவாலை.
23. ஆ. சூசைதாசன், போயிட்டி, இளவாலை.
24. ஏ. பிலேசியான் குருஸ், மாதகல்.
25. சி. செபஸ்ரியன், அகஸ்ரீன் லேன். இளவாலை.
26. எம். டி. அத்தனஸ், புங்குடுதீவு, கிழக்கு.
27. இமல்டா தேவநாயகம், குருநகல்.
28. ரி. எம். வேதநாயகம்பிள்ளை, பாங்ஷல் வீதி, யாழ்ப்பாணம்.
29. ம. இப்போலிற், தேத்தாப்பளை.
30. ஜே ஸ்ரனிஸ்லாஸ், த. க. பாடசாலை, சூடாப்பாடு.
31. நா. இரத்தினசபாபதி, ஆர்.சி. பாடசாலை, வதிரி.
32. செ. பெ. கு. சிங்கம், நெடியகாடு, வல்வெட்டித்துறை.
33. சூ. விவியற்றிலிஸ், ஆர். சி. தமிழ்ப் தமிழ்ப்பெண்பாடசாலை,கடற்கரைத் தெரு.
34. டபிள்யு. அந்தோனி ஒலிவர் பெர்னண்டோ, அர்ச். மரியநாயகி கல்லூரி, நீர்கொழும்பு.
35. எம். எஸ் அலோசியஸ், அடப்பன் வீதி, யாழ்ப்பாணம்.
36. ஏ. ரூக், சஞ்சூசையப்பர் கழகம், கொழும்புத்துறை.
37. பத்திநாதர் மரியதாசன், கலட்டியம்பத்து, சில்லாலை.
38. அ. பாக்கியநாதன், பலாலித்துறை.
39. ம. சவிரிமுத்து, ஆர். சி. பாடசாலை, மாவிலங்கேணி.
40. எம். மரியான், ஆர். சி. பாடசாலை, தன்னுமுனை.
41. அ. அந்தோனிமுத்து, ஆர்.சி. பாடசாலை, விடத்தல்தீவு.
42. ஏ. ஆஞ்செலா குரூஸ், கன்னியர் மடம், வங்காலை.
43. கே. என். ஆசீர்வாதம், யாழ்ப்பாணம்.
44. ம. மேரி மெக்டலின், சில்லாலை.
45. பியாற்றிஸ் கஸ்மீர், சில்லாலை.
46. பி. மரியநாயகம், செம்பியன்பற்று.
47. எஸ். எஸ். செல்லையா. தன்னுமுனை.
48. சவிரிமுத்து அந்தோனிப்பிள்ளை, விடத்தல்தீவு, மன்னார்.
49. வி. செறபினம்மா, மல்லாகம்.
50. றிச்சேட் யோசவ், சில்லாலை.
51. தனலீலா வஸ்தியாம்பிள்ளை, சில்லாலை, பண்டத்தெருப்பு.
52. சலாக்கினி கிறிஸ்தோப்பர், சில்லாலை.

பிழையாக விடையனுப்பிப் பெயர்கள் வெளிவராதோரில் அதிகமானோர் எலுமிச்சம் பழங்களின் தொகையில் தான் பிழைவிட்டிருக்கிறார்கள். சிலர் மாத்திரம் தேங்காய்களின் தொகையில் பிழைவிட்டிருக்கின்றனர்.

கல்வியைப்பற்றிப் "பொன்" பாடிய பாவடிபோன்று பலர் பாடிஅனுப்பி இருக்கின்றனர். அவைகள் தகுதி கண்டு தெரிவுசெய்து அடுத்தஇதழில் வெளிவரும்.

## நன்றியறிந்த தோத்திரம்

பரிசுத்த சதாசகாயமாதாவின் அனுக்கிரகத்தினுல் எனக்குண்டான பலகஷ்டங்களிலும்நின்று காப்பாற்றப்பட்டதற்கு நன்றியாக இதைப்பிரசுரிக்கிறேன்.

யாழ்ப்பாணம் மேற்றில்டாமலர்

## யேசுவுக்காக

அர்ச். கமில்லஸ் பாலியவயதில் பரிசுத்த தனத்தைக் காட்டவில்லை. தகப்பனால் கெடுக்கப் பட்டார். அர்ச். வின்சென்ற் டீபோல் சிறுபிராயத்தில் பன்றி மேய்த்தார். குருவானபின் கப்பற் கொள்ளைக்காரனின் கைதியானர். எசமானை மனந்திருப்பியபின் அவனுடன் பிரான்சிற்குத் தப்பியோடினர். அர்ச். ஜெரூம் எமிலியான் படைத்தலைவனாய் இருந்தவர். சண்டையிற் பிடிபட்டுக் கைதியாய் இருக்கும் பொழுது தேவதாயாரின் உதவியால் தப்பினர்.

கமில்லஸும் எமிலியானும் மனந்திரும்பிய பின்னர் பிறர்சிநேகஊழியத்தில் ஈடுபட்டார்கள். வின்சென்ற் டீ போலும் அவ்விதமே செய்தார். கமில்லஸ் வைத்திய சாலைகளில் நோயாளிகளை — விசேஷமாய் மரணத்தருவாயில் இருப்பவர்களைப் பராமரித்தார். எமிலியான் அநாதரவாய் வீதிகளில் அலைந்து திரியும் சிறுவருக்கு ஊண், உடை, உறைவிடங் கொடுத்து ஆதரித்தார். வின்சென்ற் மரக்கலங்களில் தண்டுவலிக்கும் அடிமைகளை ஆதரித்தார்.

மூவரும் சந்நியாச சபைகளை அடிப்பிட்டனர். கமில்லஸ் பிணியாளரைப் பராமரிக்குஞ் சகோதரர் சபையை உண்டாக்கினர். வின்சென்ற் ஞான ஒடுக்கம் போதிக்கும் குருமார் சபையையும், பிறர்சிநேகக் கன்னியர் சபையையும் ஏற்படுத்தினர். எமிலியான் சிறுவரைப் படிப்பிக்கும் ஆசிரிய சபைகளை உண்டாக்கி அநாதசாலைகளைக்கட்டினர்.

இவர்கள் இப்படியேன் செய்தார்கள்? பிறரில் யேசுவைக்கண்டபடியால் அல்லவா?

நீங்களும் பிறரில் யேசுவைக் காண்கிறீர்களா? என்ன பிறர்சிநேக ஊழியஞ் செய்கிறீர்கள்? செய்ய விருக்கிறீர்கள்?

— M. J. M.

## கண்டறியுங்கள்

பின்வருவனவற்றில் மாறுபட்டுநிற்கும் சொற்களை முறைப்படி நிரைப்படுத்தி எழுதுங்கள் பார்க்கலாம்.

(1) "சுவப் புகழ் தேவை ஏன்"
அ. அ. ஜெயநாதன்
பாண்டியன் தாழ்வு.

(2) "நாமமே அற்ப லோவம்"
சே நவராஸ்
சில்லாலை.

(3) "உலக மாழும் மேயர்க்கு ஒக்கும்"

(4) a. "தோழொடு புகற்றின் கன்றுதோ"
b. "கலை குடிக்கிறநாய்யாது"
யு. மரியநாயகி
போயிட்டி.

## கணிதப்பகுதி

(1) 3 பூனைகள் 3 நிமிஷங்களில் 3 எலிகளைப் பிடிக்குமானல், எத்தனை பூனைகள் 100 நிமிஷங்களில் 100 எலிகளைப்பிடிக்கும்?

அ. சிவக்கொழுந்து
ஆர். சி. பாடசாலை, புதுக்குடியிருப்பு.

(2) 20 அப்பங்கள் இருக்கின்றன. அவற்றை ஆண்களுக்கு 2 அப்பமும், பெண்களுக்கு $\frac{1}{2}$ அப்பமும், சிறுவர்களுக்கு $\frac{1}{4}$ அப்பமுமாகப் பகிரவேண்டும். 20 அப்பங்களையும் 20 பேருக்குப்பகிர வேண்டும். ஆண்கள், பெண்கள், சிறுவர்கள் எல்லாருமாக 20 வரவேண்டும். ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை? சிறுவர்கள் எத்தனை?

(3) ஒருமனிதன் சந்தைக்குச் சென்று தேங்காய்கள்வாங்கி 100, 100 ஆக 2 மூடைகளிற் கட்டினுன். அவன் வீட்டிற்கும், சந்தைக்கும் இடைத்தூரம் 80 மைல். தேங்காய் மூடைகளை வீட்டிற்குக்கொண்டுபோகவேண்டுமாகில் ஒருமைலுக்கு ஒருமூடைக்கு ஒருதேங்காய்வீதம் கூலி கொடுக்க வேண்டும். அவன் மிகுதியாய் எத்தனை தேங்காய் வீட்டிற்குக் கொண்டுபோவான்?

ஏ. திருச்செல்வம்
சென் றீற்றஸ், இளவாலை.

## அரசாங்க அறிவித்தல்

### வனபரிபாலனப் பகுதி

N. 1902—6-8-54 காலை 9 மணி தொடக்கம் சுன்னுகம் அரசினர் மரக்காலையில் 55 கூறுகள் அடங்கிய பாலை, காட்டாமணக்கு (பழையதும் புதியதும்) மரங்கள் 55—602.0 கனஅடி, 7 கூறுகள் அடங்கிய புதிய முணைமரங்கள் 7—98.3 கன அடி, 29 கூறுகள்அடங்கிய புதியமுதிரை மரங்கள் 29—318.6 கனஅடி, 888 அரிந்த மரத்துண்டுகள் — 601.5 கனஅடி, ஒவ்வொருகூறும் ஏறக்குறைய 50 கன அடி, 3-ம் தரக் கம்புகள் — 454, 2-ம் தரக் கம்புகள்—20 முதலியன பகிரங்க ஏலத்தில் விற்கப்படும். விற்பனவிற்கு முன் அவற்றைப் பார்க்கவிரும்புவோர் டிப்போக் கீப்பரின் அனுமதியுடன் பார்வையிடலாம்.

## சந்தானமாதா சேத்திரம்

### வலித்தூண்டல் (கீரிமலை)

அர்ச். அன்னம்மாள்திருநாள் வருகிறது

ஆவணிமாதம் 1-ந் தேதி

வழமைபோல நவநாள் ஆயத்தம், திருநாட்பாடற்பூசை, விருந்து நடைபெறும். யாத்திரிகர்களுக்கு வேண்டிய வசதிகளெல்லாம் தயாராயிருக்கும்.

கட்டளைக்குரவர்
இளவாலை

## அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ்சபை

அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றாஞ் சபை மாதாந்தக்கூட்டம் இம்மாதம் 30-ந் திகதி பி. ப. 5 மணியளவில் அர்ச். சூசையப்பர் சிற்றாலயத்தில் நடந்தேறும். ஆவணிமாதத்தில் பரிபூரண பலன்களடையக்கூடிய நாட்கள் பின்வருமாறு:— 2, 4, 11, 12, 15, 16, 19, 25. பொதுப்பாவ மன்னிப்பு அடையக்கூடிய நாட்கள்:— 12, 15, 22, 25. இக்கூட்டம் ஆடம்பரமான கூட்டமாயிருக்கும். ஏனெனில், சில சகோதரர்கள் வார்த்தைப்பாடு எடுப்பார்கள். வேறுசிலர் தமதுநவாப்பியாசகாலத்தைத் துவக்குவார்கள்.

A. S. Francis of Mary
for Director

## நன்றியறிந்த தோத்திரங்கள்

யேசுவின் திருஇருதயத்தின் இரக்கத்தினுலும், சதாசகாய மாதாவுடையவும், அர்ச். சூசையப்பர், அந்தோனியார், தெரேசம்மாள், மற்றும்சகல அர்ச்சியசிஷ்டர்களுடையவும் மன்றாட்டினுலும் என் மகளுக்கு இருந்த கடுமையானவருத்தம் குணமடைந்தது. அவர்களின்நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

G. A.

* * *

சதாசகாய இராக்கினியின் மன்றாட்டத்தினுல் எனது மகளுக்குவந்த ஆபத்தான வருத்தத்திலும், எனக்குவந்த வருத்தத்திலும், எனதுமாட்டுக்குவந்த வருத்தத்திலும் நின்று காப்பாற்றப் பட்டதற்கு நன்றியறிதலாக நேர்த்திப்படி இதனைப் பிரசித்தப்படுத்துகிறேன். சதாசகாயநாயகியின் திருநாமம் வாழ்த்தப் படக்கடவது.

சில்லாலை S. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கட்டளை விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திரிக்கோட்டில் 11,403-ம் இலக்கத்தில் திருநெல்வேலி மேற்குக்குடி முருகர் முதலித்தம்பி கைம்பெண் நல்லமுத்து வழக்காளியாக யாழ்ப்பாணத்திலிருக்கும் "யாழ்நகர்கஷ்டநிவாரண பாதுகாப்புச் சங்க"த்தின் தலைவர் விசுவநாதர் யோசேப்பு மனுவல்பிள்ளை 1-ம் எதிரியாகவும், தனாதிகாரி கதிரவேலு குசைப்பிள்ளை 2-ம் எதிரியாகவும், இணைக்காரியதரிசிகள் சவிரிமுத்து வஸ்தியாம்பிள்ளை 3-ம் எதிரியாகவும், சி. த. தம்பிராசா 4-ம் எதிரியாகவும் தனது காலஞ்சென்ற புருஷன் முருகர் முதலித்தம்பி ஓர்அங்கத்தவராய் இருந்தபடியால் அவருக்குச்சேரவேண்டிய உதவிப்பணம் ரூபா 1,200/- ஷை சங்கத்திலிருந்து அறவிட்டுக்கொள்ளும்படி ஷை இலக்கத்தில் வழக்குத்தொடர்ந்து ஷை 1-ம், 2-ம், 3-ம், 4-ம் எதிரிகளுக்கு 27-7-54-ல் ஷை கோட்டில் வெளிப்பட்டு மறுமொழி சொல்லும்படி கட்டளையிடப்பட்டிருக்கிறது.

ஆகையால், ஷை சங்கத்தின் அங்கத்தவர்களும், இன்னும் ஷை பிராதில் தொடர்பு உடையோர் எவராவது 27-7-54 காலை 10 மணிக்கு ஷை கோட்டில் வெளிப்பட்டுத் தங்களுக்கு ஏதாவது பிசகுதடையிருப்பின் வெளிப்படுத்தும்படி இத்தால் கட்டளையிடப்படுகிறது.

1954-ம் ஸ்ரீ யூலை மீ 20உ
கோட்டுக்கட்டளைப்படி
Sgd. K. A. Sebastian
சக்கிடுத்தார்

# தேவை

கத்தோலிக்க சமயசம்பந்தமான பிரதிமைப்படங்கள், சித்திரப்படங்கள் பதியப்பெற்ற பாவித்த முத்திரைகள் தேவை. விபரங்களுக்கு எழுதவும்.

பீ. வி. அந்தோனிப்பிள்ளை
புதுக்குடியிருப்பு, தலைமைஆசிரியர்
முல்லைத்தீவு.

# வதிரிப்பதியின் உயரியவிழா

## சாங்கோபாங்க சுவாமிகளின் நினைவுதினம்

## 18-7-54

அன்று ஞாயிற்றுக்கிழமைபகல். ஆலயமணிகள் ஆர்ப்பரிக்க, வடமாராட்சிக் கத்தோலிக்கமக்கள் அணிஅணியாய்முன்செல்ல, அலங்கரிக்கப்பட்டுத் தேசோமயமாய்விளங்கிய ஆசா. சாங்கோபாங்க சுவாமிகளின் பிரதிமைப்படத்தை நான்குசிறுர்கள் தாங்கிச்செல்லப் பவனிபோந்தகாட்சி வெகுமாட்சியாய்இருந்தது. ஊர்வலமக்களை வதிரி, திரு இருதய கலாசாலை வரவேற்றுநின்றது. திருஇருதய கல்லூரி அதிபர் வண. சுவாமி பி. ஈ. அல்பிறட், எம். ஏ. அவர்கள் பிரதிமைப்படத்தைத்திறந்து விழாவை ஆரம்பித்துவைத்தார். சாங்கோபாங்கசுவாமிகளின் சீவியவாலாற்றை ஆசிரியர் என். எம். சிங்கராயர்அவர்கள் இன்சுவைததும்ப எடுத்துக்கூறினின்றுர். அவ்ரைத்தொடர்ந்துபண்டிதர் ஜி. ஜே. பெனடிக்றஅவர்கள் சபையோரின்கரகோஷமத்தியில் வெகுசாதுரியமாகப் பொன்னுரைகள்கூறினின்றுர். இன்னும் திரு. என். அகஸ்ரீன், திரு. பி. ஏ. ஜே. சேனுதிராசாஎன்பவர்களும் சாங்கோபாங்க சுவாமிகளின் விசேஷசம்பவங்களை எடுத்தியம்பினுர்கள். ஈற்றில் விழாக்காரியதரிசியாகச் செயலாற்றிய ஆசிரியர் திரு. பி. அந்தோனிப்பிள்ளை அவர்கள் தலைவர்அவர்களுக்கும், சொற்பெருக் காற்றியவர்களுக்கும், சமுகந்தந்து விழாவைச்சிறப்பித்த வடமராட்சிக் கத்தோலிக்கமக்களுக்கும் நன்றிகூறி, இன்னும் இவர்போன்றகத்தோலிக்கமகான்களான வீரமாமுனிவர், வேதநாயகம்பிள்ளை, சுவாமி. ஞானப்பிரகாச அடிகள் ஆகியவர்களின் நினைவுதினங்களையும் கொண்டாடவேண்டுமென நினைவுறுத்திக் கடைசிநன்றிகூறிநிற்க விழா இனிது முடிவுபெறலாயிற்று.

கண்டுமகிழ்ந்தேன்.

# கல்லாறு, அர்ச். அருளானந்தர் கோயிற்திருநாள்

தமிழ்நாட்டின் தனிப்பெரும் வேதசாட்சிபோல் இலங்கையின் ஒரேயொருகோயிலான கல்லாறு, அர்ச். அருளானந்தர்கோயிற்திருநாள்சென்ற 19-6-54 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஒருமாதகாலமாக நோவனைகள்நடந்துவந்தன. 17-7-54 சனிக்கிழமைஇரவு கல்லாற்றுக் கட்டளைக்குரவர் வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமியவர்கள் மற்றும்இருகுரவர்கள் உதவிசெய்யத் திருநாள் வேஸ்பர்பாடினுர். நாட்டின் பலபாகங்களிலிருந்தும தங்கள்உபகாரியான அர்ச்சியசிஷ்டருக்கு வணக்கம் செலுத்துமுகமாக ஆயிரக்கணக்கான மக்கள் வந்துகுழுமியிருந்தனர். ஆசீர்வாதம்முடிந்ததும் கல்முனைக்கட்டளைக்குரவர் வண. ஹென்றி பொன்னையா சுவாமியவர்கள் திருநாள் அர்ச்சியசிஷ்டரின் திருச்சீவியத்தை விளக்கி இனியதோர் பிரசங்கம்செய்தார். பின்னர் அர்ச். அருளானந்தரின்திருச்சுரூபம் அலங்கரிக்கப்பட்ட ரதத்தில் வைத்து வாத்தியங்கள்இசைக்க, பத்திச்சபைக்கன்னியர்கள் இனியகீதங்கள்படிக்க, மக்கள் திருச்செபமாலை ஓதியவண்ணம் நான்குவீதிகள்வழியாக்ச் சுற்றுப்பிரகாரமாகக் கொண்டுவரப்பட்டது.

அடுத்தநாள் ஞாயிற்றுக்கிழமை காலை விசுவாசிகளும், கட்டளைக்குரவரும் மகாவந். திரிகோணமலை மேற்றிராணியாண்டவரவர்களை ஊர்வலமாகக் கோயிலுக்கு அழைத்துவந்தனர். ஆண்டகையவர்கள் திருநாள்பூசை நிறைவேற்றி இனியதோர்பிரசங்கமும் செய்தார். பூசைக்குப்பின் திவ்வியநற்கருணை ஆசீர்வாதம்அருளப்பட்டு, அர்ச்சியசிஷ்டரின் திருப்பண்டம் முத்திசெய்தலும் நடந்தேறியது. திருநாளுக்கு வந்திருந்த சகலருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது.

J. S.

## திரு. எஸ். ஜே. சபாபதி அவர்களின் தேகவியோகம்

மல்லாகவாசரும், சேர்வேயருமாகிய திரு. செல்லையா யோசெவ் சபாபதி அவர்கள் இரத்தக்கொதிப்பு நோய்கண்டு, அந்தியதேவதிரவிய அனுமானங்களைப் பெற்றுச் சென்ற 28-6-54 காலை இறைவன் திருவடி எய்தினுர். மரிக்கும்போது இவருக்கு வயது 68. இவர்தந்தையார் மல்லாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கமானியார் சபாபதிப்பிள்ளை. தாயார் சண்டிருப்பாய் வாசரானகாலஞ்சென்றமேரி வள்ளியம்மைப்பிள்ளை. இவர்களின் சிரேஷ்டபுத்திரரான இவர் 25 வருடங்களாக அரசினரின்கீழ் சேர்வேயராக்க் கடமையாற்றிவந்து இளைப்பாறிய பின்னும் 20வருடங்களாக யாழ்ப்பாணப்பகுதியிலே சேர்வேயராகத்தொழில்புரிந்ததோடமையாது, ஊக்கமுள்ள ஓர்கமக்காரராயிருந்து அநுராதபுரத்திலும், கிளாலியிலும் போதியகமபுலங்களைக் கொண்டிருந்து அந்தியகாலம் வரை அயராதுழைத்துவந்தார்.

தயாளகுணமும், தருமசிந்தையும் படைத்த இவர் முன்னேரும், இனசனரும் பெரும்பாலும் சைவசமயத்தினராயினும் இவர் உத்தம கத்தோலிக்கராக வாழ்க்கை நடத்திவந்தார். இவரின் பிரேதமானது கன்னியாஸ்திரீமார், பெருந்திரளான இனசனர், சிநேகிதர்கூடிய சமுகத்திலே, இவரால் தமது கிருகத்தின்பக்கமாக அமைக்கப்பட்ட சிற்றுலயங் கொண்டுசென்று ஐந்து குருப்பிரசாதிகள் சமேதராய் வண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள் அந்திமசடங்குகளை நிறைவேற்றிய பின் அளவெட்டிச் சேமக்காலைக்கு ஊர்வலமாகக் கொண்டுசென்று வண. பாலசுந்தரம் சுவாமியவர்கள் கடைசி ஆசீர்வாதம் கூறிநிற்கப் பூமிதானம் செய்யப்படலாயிற்று.

இவர் பிரிவால் வருந்தும் பாரியாரோடும், செல்வி தெரேசா (ஆசிரியை, சாவகச்சேரி மத்தியகல்லூரி), திரு. சாள்ஸ் (புகையிரதப்பகுதி உத்தியோகஸ்தர், மாகோ), செல்வி கார்மேல் (வைத்திய கல்லூரி மாணவி), செல்வி றீற்ரு (ஆசிரியை, கடுகாஸ்தோட்டைக் கன்னிகாமடம்), திரு. கிறிஸ்ரோபர் (ரக்கேஸ் கம்பெனி), முதலாம் புத்திரர் புத்திரிகள் பதின்மரோடும், ஸ்ரீமதி செல்லம்மா–சவிரிமுத்து (கொழும்பு), ஸ்ரீமதி எலிசபெத்–பீற்றர் (மாதகல்), சங். சிஸ்றர் மேரி கொன்சாக்(பருத்தித்துறைமடம்) ஆகிய சகோதரிகள் மூவரோடும், மற்றும் இனசனரோடும் நாமும் அனுதாபப்படுகின்றேம்.

R. I. P.

# குடாப்பதியின் குதூகலப் பெருநாள்

ஆடிமதியின் ஆறாம்தினம் கற்பினுக்காய்த் தனதுஆவியைத்தியாகஞ்செய்த அர்ச். மரியாகொறெற்றியின் திருநாளாகும். இத்திருநாள் முதன்முறையாக இங்குள்ள பள்ளிப்பாலர் பாலகிகளால் 14-ந்திகதிபுதன்கிழமை பத்திச்சிறப்பாய்க்கொண்டாடப்படலாயிற்று. திருநாளின்முன் திரிதினவிழாக்கள் நடைபெற்றன. உதவிச்சுவாமிஅவர்களால் அர்ச். கொறெற்றிஅம்மாளின் சரிதையும், அவளது சீவியத்தைப் பாலியபெண்கள் கண்டுபாவிக்கும்விதமும் தேனினுமினிய தெளிதமிழில் எடுத்துரைக்கப்பட்டன. றேசாப்புஷ்பங்களால் சிங்காரிக்கப்பட்ட திவ்விய ஆசனத்தில் திருநாள்நாயகியின் பிரதிமை பிரவைகான்றது. செபமாலைநாயகியின் சிற்றுலயத்தில் எள்ளிடவிடமின்றி எண்ணிறந்த பள்ளிச்சிறுரும்; அன்னவர்களின் பெற்றுர்உற்றுரும் குழுமியிருக்கப் புதவாரம வண. உதவிச்சுவாமியவர்கள் திவ்வியபூசைநிறைவேற்றித் திருவிருந்தருளினுர், இடையிடையே இன்னிசைக்கீதங்கள் இனிதேஇசைக்கப்பட்டன. பூசைமுடிவில் சுவாமியவர்கள் இறுதிப்பிரசங்கம் செய்து பிள்ளைகள்மேல் கரம்நீட்டி விசேடஆசிரளித்தார். பின்னர்பள்ளியிலே பலஆடல்பாடல்களும், விருந்துபசாரணைகளும் நடைபெற்றுத் திருநாள் இனிதே சமாப்திஆயிற்று.

ஜே ஸ்ரனிஸ்லாவுஸ் குறேரா

# மரணசங்கதி—சில்லாலை

சில்லாலைவாசரும், வித்தியாதரிசி திரு. எம். எஸ். இம்மனுவேல் அவர்களின் தாயாருமான திருமதி ஆரோக்கியம் செபஸ்தியாம்பிள்ளை வயோதிக நோய்கண்டு அந்திம தேவதிரவியஅனுமானங்களைப்பெற்று 14-7-54 புதன்கிழமை அமலன்பதம் சேரலாயினு. மரிக்கும்போது இவவுக்கு வயது 94. மறுநாள் சாயந்தரம் பலவிடங்களிலுமிருந்து வந்துகூடிய இனசனர், மித்திரர்சமுகத்தில் இவவின்பிரேதம் பேழையில்வைத்துக் கட்டளைக்குரவர் வண. எல். டெசிசுவாமியவர்கள், வண. பி. ஈ. அல்பிறெட் சுவாமியவர்கள் சமேதராய்த் துக்கசங்கீதம் பாடிச்செல்லச் சேமக்காலை கொண்டுசென்று அடக்கஞ்செய்யப் படலாயிற்று. இவவின் மரணத்தால் துயருறும் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் ஆகியோருடன் நாமும் அனுதாபப்படுகிறேம்.

R. I. P.

# உத்தரீயமாதா திருநாள்

வவுனியாப்பகுதியைச்சேர்ந்த இளமருதங்குளம் அர்ச். உத்தரீயநாயகியின் ஆலயத்திலே உத்தரீயமாதாதிருநாளின் ஆரம்பவிழாக்கள் சென்ற 9-7-54 வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாயின. 15-ந்திகதி வியாழக்கிழமைமாலை 7மணிக்கு வவுனியாக் கட்டளைக்குரவர் வண. எஸ். வேந்தக்கோன்சுவாமியவர்கள் வேஸ்பர்பாடி மறுநாட்காலை 7-30மணிக்குத் திருநாட்பூசைநிறைவேற்றினுர். அதன்மேல் திருச்சுரூப சுற்றுப்பிரகாரம்பக்திஆசாரத்துடன் நடந்தேறியது.

— எஸ். எல். எஸ்.

# சுதேச வர்த்தமானம்

## கூட்டுறவு ஆஸ்பத்திரி

யாழ்ப்பாணத் தீவுப்பகுதிமக்களுக்கென ஒருலட்சம்ரூபாசெலவில் கூட்டுறவுஆஸ்பத்திரி ஒன்றை அமைப்பதென்று கொழும்பிலுள்ள தீவுபற்று அபிவிர்த்திச்சங்கம் தீர்மானித்திருக்கிறது. ஆஸ்பத்திரிவசதிகள் கிடையாது கஷ்டப்படுகின்ற தீவுபற்றுமக்களது வேண்டுகோளின்பேரிலேயே இந்த ஆஸ்பத்திரி அமைக்கப்படவிருப்பதாகச் சங்கத்தலைவர் தெரிவித்திருக்கின்றுர். 75,000 மக்களைக்கொண்ட தீவுகளுக்கென ஊர்காவற்றுறை, புங்குடுதீவு, நெடுந்தீவுஎனும் மூன்றிடங்களிலும் தற்போது மூன்றுஆஸ்பத்திரிகளே இருந்துவருகின்றன, ஏனையதீவுகளில் டிஸ்பென்சறிகளே இருக்கின்றன. புதியகூட்டுறவு ஆஸ்பத்திரியை அமைக்கச் சரவணை – சுருவில்சந்திதான் தகுந்தஇடமென்று சொல்லப்படுகிறது.

## மூவர்விசாரணைக் கம்மிஷன்

தற்காலீகமாக வேலைநிறுத்தஞ்செய்யப்பெற்றிருக்கின்ற மத்தியவங்கியின் கவர்னர் திரு. என். யூ. ஜயவர்த்தன அவர்கள் தமதுகடமையில் ஒழுங்கீனமாகநடந்துகொண்டார் என்றகுற்றச்சாட்டை விசாரணைசெய்யத் திரு. ஏ. ஆர். எச். கனகரத்தின, கியூ. சி., திரு. எச். ஏ. டி சில்வா, சேர். எறிக் ஜான்ஸ்எனும் மூவரையுங் கொண்ட ஓர்விசாரணைக்கம்மிஷன் சென்றவியாழக்கிழமை நியமிக்கப்பட்டிருக்கிறது. விசாரணை பகிரங்கமாக நடைபெறும். திரு. என். யு. ஜயவர்த்தன, இவர்பாரியார் ஆகியஇருவரும் விசாரணைசெய்யப்படுவார்கள். ஆறேகால் லட்சம் ரூபா சம்பந்தப்பட்டுள்ள 49 விஷயங்கள் விசாரணைக்குக் குறிக்கப்பட்டிருக்கின்றன.

## புகையிலை ஒப்பந்தம்.

இந்தியாவுடன் இலங்கைசெய்துகொண்ட புகையிலைஒப்பந்தத்தை நீக்கிவிடவேண்டுமென்று தாம்சிபாரிசு செய்திருப்பதாக உணவு–கமத்தொழில் மந்திரியார் ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் பாராளுமன்ற சனப்பிரதிநிதிகள் சபையிலே சென்றசெவ்வாய்க்கிழமை தெரிவித்திருக்கின்றுர். இந்தஒப்பந்தம் இலங்கைக்கு அனுகூலமாகஇல்லையென அவர்கூறுகின்றுர். ஆனல், 1955-ம் ஆண்டு புரட்டாசிமாதம் முடிகிறவரையிலே எந்த அரசாங்கமும் இந்தஒப்பந்தத்தை நீக்கமுடியாதெனத் தெரியவருகிறது. 1953-ம்ஆண்டு பங்குனிமாதம் 31-ந் திகதிக்குப்பின் ஆறுமாதகால முன்னறிவித்தல் கொடுத்துத்தான் எந்தஅரசாங்கமும் ஏற்பாடுகளை நீக்கலாமென்று ஒப்பந்தத்தின் ஐந்தாவதுபிரிவில் சொல்லப்பட்டிருக்கிறதாம்.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 22-1954

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org